விலை: 30.00
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 072 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 17 புதன்கிழமை (01.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## நாடளாவிய ரீதியில் இன்று பொது முடக்கம்

### 40 தொழிற் சங்கங்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளன

(கொழும்பு)

துறைமுகம், மின்சாரம், எரிபொருள், மருத்துவம் மற்றும் வங்கித்துறை உள்ளிட்ட பல்வேறு சேவைகளில் ஈடுபடும் 40 தொழிற் சங்கங்கள், இன்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளன.

மின் கட்டண உயர்வு மற்றும் வரிச் சுமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளதாக குறித்த தொழிற் சங்கங்கள் அறிவித்துள்ளன.

எவ்வாறிருப்பினும், துறைமுகம், விமான நிலையம் மற்றும் பொதுப் போக்குவரத்து சேவைகள் உள்ளிட்ட சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்று முன்தினமிரவு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் பல தொழிற் சங்கங்கள் ஒரு நாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியிருந்தது.

அரசாங்கத்தின் அசாதாரண வரி அறவீட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்து, இன்று நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் தொழிற் சங்க நடவடிக்கைகளுக்கு ஆசிரியர்களும்

▶15

### யாழ்.மாநகர சபையின்

## வரவு - செலவுத் திட்டம் மீண்டும் தோல்வி

### பதவி இழக்கிறார் ஆனல்ட்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் 2023ம் ஆண்டுக்கான பாதீடு மீண்டும் 6 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

இதன்மூலம் யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் பதவியிழந்தவராகிறார்.

▶15

### யாழில் மர்மமான முறையில்

## 45 நாட்களேயான குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழில் பிறந்து 45 நாட்களேயான ஆண் குழந்தை ஒன்று மர்மமான முறையில் உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணம் பண்ணாகம் பகுதியை சேர்ந்த விஜயகுமார் நாகவேலவன்

▶15

### மின் கட்டணத்தை குறைக்கக்கோரி

# அரசுக்கு எதிராக தீப்பந்தப் போராட்டம்

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை குறைக்குமாறு கோரி அரசுக்கு எதிராக கொழும்பில் நேற்று தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு மாளிகாவத்த - கேதராம பகுதியில் மக்கள் இவ்வாறு வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

▶15



### சீனாவின் பதிலுக்கு அமையவே

## ஐ.எம்.எப் கடன் வசதியை இலங்கை பெற முடியும்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கும் கடன் வசதி, சீனாவின் பதிலிலேயே தங்கியுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தில் சீனா சாதகமாக பதிலளிக்கும் என எதிர்பார்ப்பதாக அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சீனாவுடன் தொடர்ந்து

▶15

### பொருளாதாரத்தை வெற்றி கொள்ள

## இந்திய - பசுபிக் பிராந்திய தொடர்பு முக்கியமானது

### இலங்கைக்கு அமெரிக்கா அறிவுரை

(கொழும்பு)

இலங்கை எதிர்நோக்கும் பொருளாதார சவால்களை வெற்றி கொள்ள இந்திய - பசுபிக் பிராந்திய தொடர்பாடல் மிகவும் முக்கியமானது என இலங்கைக்கு

▶15



## ஜனநாயகத்துக்காக போராடும் மக்களுடன் நாங்கள் எப்போதும் ஒன்றாக நிற்போம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(குளியாப்பிட்டி)

ஜனநாயகத்துக்காக போராடும் பொதுமக்களுடன் நாங்கள் எப்போதும் ஒன்றாக நிற்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலை நடத்

▶15



## புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்து செயற்படுகின்றது

### அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்தும் செயற்படுகின்றது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாதம் குறித்த 2021ஆம் ஆண்டிற்கான அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்

▶15

### மக்களின் உரிமைகளுக்காக

## தமிழ் அரசியல் தலைவர்கள் ஒரே குரலில் வலியுறுத்த வேண்டும்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் வாழும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்கள் ஒரே குரலில் மக்களுக்கான உரிமைகளை பெற்றுக் கொள் [illegible] ஆட்சியாளர்களை வலியுறுத்த வேண்டும்.

அரசியல் கட்சிகளின் இறுதி இலக்கு வேறாக இருந்தாலும், ஆரம்ப பயணம் ஒன்றாக இருக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் குறிப்பிட்

▶15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### ரூபாய் 25 இலட்சத்துக்கு ஆசைப்பட்டு

# ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயை இழந்த கிளிநொச்சி பெண்

(யாழ்ப்பாணம்)

பரிசாக இருபத்தைந்து இலட்சம் ரூபாய் பணத்திற்கு ஆசைப்பட்டு ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாயை கிளிநொச்சிப் பெண் ஒருவர் இழந்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

தொலைபேசி நிறுவனம் ஒன்றினால் 25 இலட்சம் பணப் பரிசு கிடைத்துள்ளதாக தொலை பேசி மூலம் கிளிநொச்சி பெண்ணொருவரை ஆசை வார்த்தை காட்டி இதற்கான வரியாக ஒரு இலட்சத்து எண்பதாயிரம் பணத்தை வைப்பிலிடுமாறு கூறியுள்ளார்.

மீண்டும் வேறொருவர் தொலை பேசி மூலம் அழைப்பெடுத்து தான் கொழும்பு இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளர் என தன்னை அறிமுகப்படுத்தியுள்ளார். உங்களுக்கு 25 இலட்சம் பணப்பரிசு கிடைக் கப்பெற்றுள்ளது. அதற்கு வரிசெலுத்தினால் மாத்திரமே பணத்தை வழங்க முடியும் என தெரிவித்துள்ளார்.

இவர்களது ஆசை வார்த்தைக்கு அகப்பட்டுக் கொண்ட குறித்த பெண் தன்னிடமிருந்த பணம் அயலவர்கள் சிலரிடம் கடனாக பெற்று ஒரு இலட்சத்து எண்பதாயிரம் பணத்தைத் திரட்டியுள்ளார்.

இவ்வாறு திரட்டிய பணத்தை ஈசிகாஷ் மூலமாக நேற்று முன் தினம் திங்கட்கிழமை அனுப்பி வைத்துள்ளார். பணத்தை அனுப்பிய சில நிமிடங்களில் பணம் அனுப்புமாறு கூறியவர்களின் தொலைபேசிக்கு அழைப்பெடுத்த போது கைத்தொலைபேசி சுவிஜ் ஒப் செய்யப்பட்டது தெரியவந்துள்ளது.

பல தடவைகள் தொடர்பு கொள்ள முயற்சி செய்த போதும் உரிய நபரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. இதன் பின்னரே குறித்த பெண்ணிற்கு தான் ஏமாற்றப்பட்டுள்ளமை தெரிய வந்தது. இவ் தொலைபேசி மூலமான கொள்ளை தொடர் பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ம-7,60)

### அம்பலாங்கொடையில்

# துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

அம்பலாங்கொடை. குளீகொட. மீட்டியகொட வீதியில் கொன்னதுவ பிரதேசத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார். மாதம்பாகம. உஸ்முதுல்லாவ பகுதியைச் சேர்ந்த 42 வயதான சுதத் சிறி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இறந்தவர் தனது மனைவியை அவர் பணிபுரியும் அலுவலகத்தில் இறக்கிவிட்டு வீடு திரும்பும் போதே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர் குறித்தோ. துப்பாக்கிச் சூடு நடத்தியவர் வந்த வாகனம் குறித்தோ இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த நபர் பலப்பிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார். (ம-7)

# மரண அறிவித்தல்

## திருமதி மனுவேற்பிள்ளை மரியம்மா



கரணவாய் கிழக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் மாளிகாவத்தை, கொழும்பு - 10 இல் வசித்தவரும் தற்போது கரவெட்டி மேற்கு கரவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனுவேற்பிள்ளை மரியம்மா அவர்கள் (24.02.2023) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - வரோணிக்கா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை - லேனாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற எதிர்வீரசிங்கம் மனுவேற்பிள்ளையின் (இளைப்பாறிய ஆசிரியர் - புனித பெனடிக் கல்லூரி கொட்டாஞ்சேனை) பாசமிகு மனைவியும் பிறிற்ரோ பிறேமகுமார், ஜெஸ்லி ஜெயக்குமார், ஸ்ரிபன் செல்வகுமார், விக்ரர் விமலகுமார் (முன்னாள் ஆசிரியர் புனித பெனடிக் கல்லூரி கொட்டாஞ்சேனை), செபஸ்ரியன் ஜீவகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மேரி பவுலினா, கொன்சி, மேரி லொறன்ரீனா, அமுதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை, பாக்கியம், சாமிநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மரியமுத்து, பிலிப், ஜெயராணி, அன்னம்மா, செல்வராணி, செல்வரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பெஸ்மன், மரிஸ்ரன், ஸ்ரிபனி, ஜெனின்ரன், ஸ்ரெவன், ஏவன் அன்றூ ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் நாளை (02.03.20223) வியாழக்கிழமை பிற்பகல் 2.15 மணியளவில் பழைய ஆஸ்பத்திரி வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து திருப்பலிக்காக கரவை பரலோகமாதா ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பிற்பகல் 3.00 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். பின்னர் கரவெட்டி சேமக்காலையில் (கீரிப்பல்லி) நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
077 340 0516 (மகன்-ஜெயா)

தகவல் :
குடும்பத்தினர்

(C-6077)

## நல்லை மங்கையர்க்கரசியின்
## சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்




### திருமதி அறிவழகி ஸ்ரீஸ்கந்தராஜா

**B.A(Hons) Dip.in.Edu S.L.T.S - I**

**பிரதி அதிபர் -**
**யா/மங்கையர்க்கரசி வித்தியாலயம்**

எமது பாடசாலையில் அளப்பரிய சேவையாற்றி முப்பத்து மூன்று வருட சேவையை அகவை அறுபதில் நிறைவு செய்து சேவையிலிருந்து ஓய்வு பெறும் எமது பிரதி அதிபர் அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் மகிழ்வோடு எல்லா நலன்களும் பெற்று இறையருளோடு நீடூழி வாழ அகம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்**

(C-6083)

# நெல்லியடியில் வீடுபுகுந்து திருட முற்பட்டவர்

### பொதுமக்களால் நையப்புடைப்பு

(கரணவாய்)

நெல்லியடி திருமால் சோதி வீதிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை திருடிக் கொண்டு செல்ல முற்பட்ட ஒருவர் பொதுமக்களால் பிடித்து நையப் புடைக்கப்பட்டு நெல்லியடிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

மேற்படி வீட்டில் உள்ளவர் கள் அரச அலுவலகத்தில் கடமை புரிவதாகவும் அவர்கள் கடமைக்குச் சென்றதை சாதகமாக பயன்படுத்தி நேற்று செவ்வாய்க் கிழமை நண்பகல் வீட்டில் நுழைந்த திருடன் அங்கு அலுமாரியில் இருந்த தங்க நகை களை திருடிக்கொண்டு வெளியேற முற்பட்ட சமயம் அப்பகுதி மக்களினால் பிடிக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க சங்கிலி மற்றும் பென்ரன் என்பன மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி திருடன் திருட்டுச் சம்பவம் ஒன்றில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு இருந்து நான்கு நாளைக்கு முன்னரே பிணையில் வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,60)

# நாட்டின் பணவீக்கம் மேலும் வீழ்ச்சியடைந்தது

(கொழும்பு)

தேசிய நுகர்வோர் விலைக் சுட்டெண்ணின் அடிப்படையில் நாட்டின் ஆண்டு பணவீக்கம் பெப்ரவரி மாதத்தில் 50.6% ஆகக்குறைந்துள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரங்கள் துறை இதனை தெரிவித்துள்ளது.

நாட்டின் ஆண்டு பணவீக்கம் கடந்த ஜனவரியில் 54.2% ஆக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக J/416 வல்லிபுரம் கிராம அலுவலர் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **லலித்குமார் சுதர்சினி** அவர்களின் அன்புக் கணவர்

அமரர் **விஜயரட்ணம் லலித்குமார்**

அவர்கள் 27.02.2023 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



தோற்றம் 12.11.1981 மறைவு 27.02.2023

பிரிவுத்துயருடன்...
**பிரதேச செயலாளரும்,**
**சமுர்த்தி உத்தியோகத்தர்களும்,**
**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**
**பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-6080)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஆண்டு இலங்கையில் 5 லட்சம் பேர் வேலையிழப்பு

## உலக வங்கி சுட்டிக்காட்டு

(வோஷிங்டன்)

**2022 ஆம் ஆண்டில் இலங்கையில் சுமார் 5 இலட்சம் பேர் வேலை இழந்துள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.**




இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை தொடர்பில் புதிய அறிக்கை ஒன்றை வெளியிட்ட உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்தின் உப தலைவர் மார்ட்டின் ரைசர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையின் படி, 2021 மற்றும் 2022 இற்கு இடையில் இலங்கையில் வறுமை தோராயமாக 13 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே காலகட்டத்தில் நகர்ப்புற வறுமையும் 5 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக மும்மடங்காக அதிகரித்துள்ளதாக உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

ஏற்கனவே ஏழைகள் என வகைப்படுத்தப்பட்ட மக்களின் வாழ்க்கைச் செலவு 65 சதவிகிதம் உயர்ந்துள்ள நிலையில் ஏழைகள் அல்லாதவர்களுக்கு 57 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

இலங்கை அதன் வரலாற்றில் ஒரு முக்கியமான தருணத்தில் இருப்பதாகவும் பல ஆண்டுகளாக பொருளாதாரத்தின் தவறான நிர்வாகம், மோசமான நிர்வாகம், மோசமான கொள்கை தேர்வுகள், கொவிட் தொற்றுநோய் மற்றும் ரஷ்ய-உக்ரைனிய மோதல்கள் போன்ற வெளிப்புற தாக்கம் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

# தொடர்ந்தும் கட்டுப்பாடுகளை மீறும் இலங்கை பொலிஸார்

## சர்வதேச மன்னிப்புச் சபை எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை அதிகாரிகள் தமது சக்தியைப் பயன்படுத்துவதில் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுடன், அமைதியான சட்ட சபைக்கான உரிமையை எளிதாக்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் பொலிஸாரால் சட்டவிரோதமாக நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகை பயன்படுத்தப்பட்டதன் விளைவாக ஒரு எதிர்ப்பாளர் கொல்லப்பட்டார். மற்றும் பலர் காயமடைந்தனர் என்ற செய்தி தொடர்பில் சர்வதேச மன்னிப்பு சபையின் பிராந்திய ஆராய்ச்சியாளர் ஹரீந் திரினி கொரையா தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். இதனை தொடர்ந்தே அவர் குறித்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

நாட்டில் பல மாதங்கள் பரவலான ஆர்ப்பாட்டங்களுக்குப் பிறகும், இலங்கை பொலிஸாருக்கு தொடர்ந்தும் தங்கள் கடமையை நினைவூட்ட வேண்டும் என்பது கவலை அளிக்கிறது.

காணொளி காட்சிகளின்படி, எதிர்ப்பாளர்கள் தப்பிப்பதற்கான சாத்தியம் இல்லாமல் ஒரு வரையறுக்கப்பட்ட இடத்தில் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

எனினும் சர்வதேச மனித உரிமைச் சட்டம் மற்றும் தமது சக்தியைப் பயன்படுத்துவதில் தரநிலைகளை மீறி பொலிஸார் நீர்தாரை மற்றும் கண்ணீர் புகையை பயன்படுத்தியதாக ஹரீந்திரினி கொரையா சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# மார்ச் மாதம் புதிய அமைச்சரவை?

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் புதிய அமைச்சரவை நியமிக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலருக்கு இதன்போது அமைச்சுப் பதவிகள் வழங்கப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (நி)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் தெஹிவளை, பிலியந்தலை, இரத்மாலானை, கொத்தட்டுவ, மகரகம போன்ற பிரதேசங்களில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சமூக மருத்துவ நிபுணர், மருத்துவர் இந்திக்க வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை புத்தளம், கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் இந்நாட்களில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த வருடத்தில் மாத்திரம் 11,184 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# புதிதாக 2500 மருத்துவர்களை சேவையில் இணைக்க நடவடிக்கை

(கொழும்பு)

புதிதாக 2500 மருத்துவர்களை சேவையில் இணைத்துக் கொள்ளவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்காக நிதி அமைச்சின் அனுமதி கோரப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க சந்திர குப்த குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் நாட்களில் மருத்துவர்களுக்கான வெற்றிடம் நீங்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சில துறைகளில் விசேட மருத்துவர்களுக்கான வெற்றிடம் காணப்படுவதாக தெரிவித்த அவர் சில மருத்துவர்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளதுடன், சிலர் விடுமுறையில் சென்றுள்ளனர்.

அரச செலவில் வெளிநாடுகளில் கல்வி கற்பதற்காகச் சென்று மீண்டும் நாடு திரும்பாதவர்களும் உள்ளனர். அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி)

# தேர்தலை பிற்போடும் அரசின் திட்டத்திற்கு துணை நிற்கும் நிதி அமைச்சின் செயலாளர்

## பேராசிரியர் பீரிஸ் சாடல்

(கொழும்பு)

தேர்தலை பிற்போடும் அரசின் சூழ்ச்சித் திட்டத்துக்கு துணை நிற்கும் நிதி அமைச்சின் செயலாளருக்கு எதிராக சகல விதமான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்நாட்டில் ஜனநாயகம் இல்லாது செய்யப்பட்டுள்ளது.

போராட்டம் இல்லை, ஆர்ப்பாட்டங்கள் கூட நடத்துவதற்கு அனுமதி இல்லை. இந்நிலைமை அபத்தானது.

தேர்தலை நடத்துவதற்கு நிதி இல்லை எனக்கூறும் அரசு, வேறு நிகழ்வுகளை நடத்தி பணம் செலவழிக்கின்றது.

அரசை நடத்துவதற்கு ஒன்றரை நாளுக்கு செலவாகும் பணம் தான் தேர்தலை நடத்த அவசியம். அதனை வழங்கலாம். ஆனால் நிதி அமைச்



சின் செயலாளர் மறுக்கின்றார்.

அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி)

# பாக்.கடற்படை தளபதி-ஜனாதிபதி உத்தியோகபூர்வ சந்திப்பு



(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்த பாகிஸ்தான் கடற்படைத் தளபதி அட்மிரல் முஹம்மட் அம்ஜத்கான் நியாசி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இலங்கை மற்றும் பாகிஸ்தான் இடையிலான கடல்சார் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான கடல்சார் நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின் அடையாளமாக பாகிஸ்தான் கடற்படைத் தளபதியினால் ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசொன்றும் வழங்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2022 ஆம் ஆண்டின் அதிசிறந்த கால்பந்து வீரராக மெஸ்ஸி தெரிவு



2022 ஆம் ஆண்டுக்கான உலகின் அதிசிறந்த FIFA கால்பந்தாட்ட வீரராக ஆர்ஜென்டீனா அணித் தலைவரும் நட்சத்திர கால்பந்தாட்ட வீரருமான லியனல் மெஸ்ஸி தெரிவானார்.

அதிசிறந்த FIFA கால்பந்தாட்ட விருது விழா பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கோலாகலமாக நடை பெற்றது.

இவ் விருது விழாவின் போது அதிசிறந்த FIFA வீராங்கனைக்கான விருதை ஸ்பெய்ன் மற்றும் பார்சிலோனா கழகத்தின் மத்திய கள வீராங்கனை அலெக்சியா பியூடெல்லாஸ் சிகுரா வென்றெடுத்தார்.

இந்த விருது விழாவில் அதிசிறந்த வீரர், அதிசிறந்த கோல்காப்பாளர், அதிசிறந்த பயிற்றுநர் ஆகிய மூன்று பிரதான விருதுகள் ஆர்ஜென்டீனாவுக்கு கிடைத்தமை விசேட அம்சமாகும்.

கட்டார் 2022 உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் ஆர்ஜென்டீனாவை உலக சம்பியனாக வழிநடத்தியமைக்காக லியனல் மெஸ்ஸிக்கு இந்த உயரிய விருது வழங்கப்பட்டது.

ஆடவர்களில் அதிசிறந்த பீபா விருதுக்கான வாக்களிப்பில் பிரான்ஸ் வீரர்களான கிலியான் எம்பாப்பே, கரிம் பென்ஸிமா ஆகிய இருவரையும் விட அதிக வாக்குகளை வென்று இந்த மகத்தான விருதை லியனல் மெஸ்ஸி தனதாக்கிக் கொண்டார்.

தேசிய அணிகளின் பயிற்றுநர்கள், அணித் தலைவர்கள் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நிபுணத்துவ ஊடகவியலாளர்கள் மற்றும் ஆதரவாளர்களால் இந்த விருதுக்கு வாக்களிக்கப்பட்டது. லியனல் மெஸ்ஸி இதற்கு முன்னர் FIFA விருதை 2019 இல் முதல் தடவையாக வென்றிருந்தார்.

போர்த்துக்கல் அணித் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, போலந்தின் நட்சத்திர வீரர் ரொபர்ட் லெவண்டோவ்ஸ்கி ஆகியோருக்குப் பின்னர் 2 தடவைகள் FIFA விருதை வென்றெடுத்த மூன்றாவது வீரர் மெஸ்ஸி ஆவார். கட்டாரில் நடைபெற்ற உலகக் கிண்ண கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் மொத்தமாக 7 கோல்களைப் போட்ட மெஸ்ஸி, பிரான்ஸுக்கு எதிரான மறக்கமுடியாத இறுதிப் போட்டியில் ஒரு கோல் போட்டு அசத்தியிருந்தார்.

அவரது அற்புதமான கால்பந்தாட்ட ஆற்றல் தங்கள் அணியின் வெற்றியில் பிரதான பங்காற்றியதாக ஆர்ஜென்டீனா வீரர்களால் அடிக்கடி புகழாரம் சூடப்பட்டு வந்தது.

உலகக் கிண்ணப் போட்டியில் அதி சிறந்த வீரருக்கான தங்கப் பந்து விருதையும் மெஸ்ஸி வென்றிருந்தார். பிரேஸில் 2014 உலகக் கிண்ண கால்பந்தாட்டத்தில் இந்த விருதை வென்ற மெஸ்ஸி, 2 தடவைகள் இந்த விருதை வென்ற முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

சர்வதேச கால்பந்தாட்டப் போட்டிகளில் 98 கோல்களைப் போட்டுள்ள மெஸ்ஸி, சிரேஷ்ட கழக மட்டப் போட் டிகளில் 492 கோல்களைப் போட்டுள்ளார்.(4)

# ஆங்கில கால்பந்து கிண்ணம் மன்செஸ்டர் சம்பியன்




ஆங்கில கால்பந்து கிண்ணத் தொடரில், மன்செஸ்டர் யுனைடெட் அணி ஆறாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

வெம்ப்ளி விளையாட்டரங்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், மன்செஸ்டர் யுனைடெட் அணியும் நியூ காஸ்ட்ல் அணியும் மோதின.

எதிர்பார்ப்பு மிக்க இப்போட்டியில், மன்செஸ்டர் யுனைடெட் அணி 2-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

இதில் மன்செஸ்டர் யுனைடெட் அணி சார்பில், கேஸ்மிரோ 33 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் மார்கஸ் ரஷ் போர்ட் 39 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அடித்தனர். (4)



வலிகாமம் லீக் நடத்திய தலைவர் கிண்ண லீக் மட்ட தொடரில் நேற்று முன்தினம் யாழ். துரையப்பா அரங்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஏழாலை பைவ்ஸ்ரார் கழகத்தை 3:2 என்ற ரீதியில் வென்று 2022 இற்கான சம்பியனானது குப்பிழான் குறிஞ்சிக்குமரன் அணி.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2774

**தனிகன்**



ஒருநாளில்
பூத்து
அதேநாளில்
மறையும்
பூக்களிடம்
கற்றுக் கொள்ள
வேண்டும்
வாழ்க்கையை
எப்படி சிரித்துக்
கொண்டே
வாழ வேண்டும்
என்று

**நந்தினி**



நம்
கண்ணீரை
நம் கையே
துடைத்துக்
கொள்ளும்
போது மனம்
தெளிவான
முடிவுக்கு
வந்து
விடுகிறது.

**கமலன்**

தான் சிறந்த மனிதன்
என்று யாருக்கும்
நிரூபிக்க
ஆசைப்படாத மனிதன்
எவனோ
அவனே உண்மையில்
சிறந்த மனிதன்.

**வருணி**

தோழா தூக்கி எறிந்தால்
விழுந்த இடத்தல் மரம் ஆகு. எறிந்தவன்
அண்ணாந்து பார்க்கட்டும் உன்னை




**சௌமி**



உனது
பிரச்சினைகளை
உன்னால்
தான்
சரி செய்ய
முடியும்.
ஏனென்றால்
அதை
உருவாக்கியவனே
நீதான்.
-ஓசோ-

**துர்க்கா**

உடைந்த பொருளை ஒட்ட வைத்து
என்னதான் அலங்காரம் செய்தாலும்
அதன் பழைய அழகை திரும்பிப்
பெற இயலாது




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக யாழில் விசேட மருத்துவமனை-ஜனாதிபதி பணிப்புரை



(கொழும்பு)

புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக யாழ்ப்பாணம், பதுளை, அம்பாந்தோட்டை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் விசேட மருத்துவமனைகளையும் பொருத்தமான இடத்தில் விசேட நவீன சிறுவர் மருத்துவமனையொன்றையும் ஸ்தாபிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சுகாதார அமைச்சின் செயளாளருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்க நாயக்கவினால் இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மருத்துவ ஆராய்ச்சிக்கான நவீன ஆய்வு கூடம் அமைப்பது தொடர்பில் ஆராய்ந்து இரண்டு மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு குழுவொன்றை நியமிக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலான குழு சபாநாயகர் இடையில் முக்கிய கலந்துரையாடல்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலான குழுவுக்கும் சபாநாயகருக்கும் இடையில் முக்கிய கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

தேர்தலுக்கான நிதியை வழங்குகின்றமை தொடர்பாக, சபாநாயகருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அனுப்பியுள்ள கடிதம் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்டுள்ள கடிதம் தொடர்பில், ஆராய்வதற்காக நிதி அமைச்சின் செயலாளரை பாராளுமன்றத்திற்கு அழைக்குமாறு சபாநாயகரிடம் எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த விடயம் குறித்து விவாதிப்பதற்காக உடனடியாக பாராளுமன்றத்தை கூட்டுமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி)

## அணுசக்தி திட்டத்தை முன்னெடுக்க அமைச்சரவை ஒப்புதல்-பந்துல

(கொழும்பு)

எதிர்கால எரிசக்தி தேவையை பூர்த்தி செய்ய அணுசக்தியை மாற்றாக கருத வேண்டும் என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அந்த தீர்மானத்தின் பிரகாரம், அணுசக்தியை பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக வழிநடத்தல் குழுவும் 9 செயற்குழுவும் நியமிக்கப்பட்டுள்ளதாக நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அந்த குழுக்கள் தயாரித்த சுயமதிப்பீட்டு அறிக்கை தொடர்பாக சர்வதேச அணுசக்தி முகவர் நிறுவனம் வழங்கிய பரிந்துரைகளின் பிரகாரம் அணுசக்தி உற்பத்தித் திட்டத்தை முன்னெடுக்கும் திறன் இலங்கைக்கு இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி, அணுசக்தி சேதங்களுக்கான சிவில் பொறுப்புகள் தொடர்பான வியன்னா உடன்படிக்கை மற்றும் அணுசக்தி சேதங்களுக்கான கூடுதல் இழப்பீடு உடன்படிக்கையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பது மிகவும் பொருத்தமானது என்று அமைச்சர் தெரிவித்தார்.

அந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் மற்றும் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் ஆகியோர் முன்வைத்த கூட்டுப் பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

## 23 கோடியே 50 இலட்சம் பெறுமதியான போதைப்பொருளுடன் வெளிநாட்டு யுவதி கைது

(கொழும்பு)

23 கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான கொக்கேய்ன் போதைப்பொருளுடன் இலங்கை வந்த வெளிநாட்டு யுவதி ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.



விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வைத்து சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் குழுவினர் மேற்கொண்ட சோதனையின் போதே இந்த யுவதி கைது செய்யப்பட்டதாக சுங்க ஊடகப் பேச்சாளர், பிரதி சுங்கப் பணிப்பாளர் (சட்ட விவகாரங்கள்) சுதத்த சில்வா தெரிவித்தார்.

துபாயிலிருந்து எமிரேட்ஸ் ஏர்லைன்ஸின் EK-650 விமானத்தில் நேற்று காலை 8.30 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த நிலையில் அவரது பயணப் பையை சோதனையிட்ட போதே கொக்கேய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த கொக்கேய்ன் கரைசலில் கொக்கேய்ன் போதைப் பொருள் செறிவு அதிகமாக காணப்படுவதாக சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள குறித்த யுவதியிடம் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (நி)

## வாக்குச்சீட்டு அச்சடிக்கும் பணி காலவரையறையின்றி ஒத்திவைப்பு

(கொழும்பு)

வாக்குச் சீட்டு அச்சடிக்கும் பணியை காலவரையின்றி ஒத்திவைக்க அரச அச்சகம் தீர்மானித்துள்ளது.

தேர்தல் தினத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமைகள் மற்றும் அச்சிடுவதற்கான வசதிகள் இன்மை போன்றவற்றை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது அச்சிடப்பட்டுள்ள வாக்குச் சீட்டுகள் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் பாதுகாப்பு இல்லாததாலும் வாக்குச் சீட்டு அச்சிடுவதற்கு பணம் செலுத்தாததாலும் கடந்த காலங்களில் இந்த நடவடிக்கைகள் தடைப்பட்டன.

தேவையான அனைத்து வசதிகளும் இருந்தால், 25 முதல் 30 நாட்களுக்குள் அனைத்து வாக்குச் சீட்டுகளையும் அச்சிட முடியும் என அரச அச்சகம் தெரிவித்துள்ளது. (நி)

## இராசிபலன்

01.03.2023
மாசி 17, புதன்கிழமை
நவமி முற்பகல் 7.56 மணிவரை

மிருகசீரிடம் பிற்பகல் 1.04 மணிவரை
சுபநேரம் 4.58-6.28 மணிவரை
இராகுகாலம் 12.28-1.58 மணிவரை

சந்திராஷ்டமம் - விசாகம், அனுசம்

வளவன்

**மேஷம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** வாக்கு மேன்மையுண்டு, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உற்சாகமான நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** போசன சுகமுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணங்களால் மனச் சோர்வு ஏற்படலாம்.

**சிம்மம்** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் வாய்ப்புண்டு.

**கன்னி** பணிகளில் உற்சாகம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை மேலோங்கும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு, எடுத்த கருமங்கள் நிறைவேறுவதில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.

**தனுசு** கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், செய்தொழிலில் மேன்மையுண்டு.

**மகரம்** ஆரோக்கியமான நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும் உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தினரின் நலனில் அக்கறை கூடும்.

**மீனம்** பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பொரு--ளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

மிதமிஞ்சிய [illegible] மனிதனை மரமாக்கி விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருந்தூர்மலையில் விகாரை கட்டுமானம்
# நீதிமன்ற உத்தரவை மீறுவது பௌத்த தர்மமா?-மாவை கேள்வி

(அராலி)

குருந்தூர் மலையில் விகாரை அமைக்கும் பணியை நிறுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த நிலையில் அதனை மீறி விகாரை அமைத்து முடித்தமை பௌத்த தர்மமா? என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கேள்வி எழுப்பினார்.

நேற்றைய முன்தினம் திங்கட்கிழமை குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவை மீறி பௌத்த விகாரை அமைக்கப்பட்டமை தொடர்பில் அவரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு நீதிமன்றத்தினால் குருந்தூர்மலையில் சட்ட விரோதமான முறையில் விகாரை அமைப்பது தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்த நிலையில் நீதிமன்றம் விகாரை அமைக்கும் பணியை நிறுத்துமாறு பொலிஸாருக்கு தடை உத்தரவு வழங்கி இருந்தது. இந்நிலையில் நீதிமன்ற உத்தரவை, மீறி பௌத்த தேரர்களின் அனுசரணையுடன் விகாரை அமைத்து முடிக்கப்பட்டது.

பௌத்த தர்மம், அதன் போதனைகள் இலங்கை அரசியல் அமைப்பின் பிரகாரம் உருவாக்கப்பட்ட சட்டங்களை மீறும் வகையில் பௌத்த தேரர்கள் செயற்பட்டமை நேரடியாகப் புலப்படுகிறது.

குறித்த செயற்பாடு நீதிமன்றத்தை அவ மதிக்கும் ஒரு செயலாக பார்ப்பதோடு பௌத்த மதத்தையும் அவமதிக்கும் ஒரு செயலாகப் பார்க்கிறேன்.

ஆகவே ஏற்கனவே வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் சட்டவிரோதமான முறையில் நீதிமன்றத்தை அவமதித்து கட்டப்பட்ட விகாரை தொடர்பில் நீதிமன்றம் உரிய கரிசனை செலுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-104)

## இந்தியத் துணைத் தூதுவருடன் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சந்திப்பு
### மகஜரும் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன பிரதிநிதிகள் இந்தியத் துணைத் தூதுவரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனை சந்தித்த மீனவர் சங்கப் பிரதிநிதிகள் மகஜர் ஒன்றை வழங்கியதோடு, வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

குறிப்பாக இந்திய கடற்றொழிலாளர்களின் நாட்டுப் படகுகளுக்கு இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கான அனுமதியை இலங்கை அரசு வழங்கவுள்ளதாக வெளிவந்த செய்திகள் தொடர்பில் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் இந்தியத் துணைத் தூதுவருக்கு தெரிவித்துள்ளனர். (4-6-33)

# ஜனாதிபதிக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதிக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர் என குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களின் வழக்கை மே மாதம் 8 ஆம் திகதிக்கு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

ஜனவரி 15 ஆம் திகதி தேசிய பொங்கல் விழாவில் கலந்து கொள்ள யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதிக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வேலன் சுவாமிகளின் வழக்கு விசாரணை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர் சங்க செயலாளர் , பல்கலைக் கழக மாணவர்கள் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

மேலும் சில சந்தேகநபர்களை வழக்கில் இணைக்கப் படவுள்ளதாக பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். அதனை அடுத்து, வழக்கை மே மாதம் 8 ஆம் திகதிக்கு மன்று ஒத்திவைத்தது. (4-6-33)



யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை வளாகத்தில் சிவபூமி அறக்கட்டளையால் நிறுவப்பட்ட ஆறுமுக நாவலர் சிலை கடந்த 26 ஆம் திகதி செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகனால் திறந்து வைக்கப்பட்டது.

## மாதாந்த சிறப்பு கலையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த சிறப்புக் கலையரங்கு நிகழ்வில் எதிர்வரும் 5 ஆம் திகதி மாலை 4.30 மணிமுதல். 6.30 மணிவரை சிதம்பர இசை மைந்தன் ப.சிவமைந்தனின் இசையரங்கு இடம் பெறவுள்ளது என இளங் கலைஞர் மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (4-6)

## ஸ்தாபன தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலா மன்றம் நடத்தும் ஸ்தாபக தின நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மனோன் மணி கலையரங்கில் கலாமன்றத் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபால சுந்தரன் விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)



சந்நிதியான் ஆச்சிரமத்தில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைக்கு 7 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பலே திருடன் கைது

(அராலி)

வட்டுக்கோட்டை பகுதியில் பல திருட்டுக்களுடன் தொடர்புடைய திருடன் ஒருவரை ஊர்காவற்றுறை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். இது குறித்து மேலும் தெரியவருகையில், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூளாய் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேகநபர் பல திருட்டுக் களுடன் சம்பந்தப்பட்ட நிலையில் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அனலைதீவு பகுதியில் தலைமறைவாகி இருந்தார்.

அவருக்கு நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் கைது செய்யப்பட்டவேளை காஸ் சிலிண்டர், உலர் உணவுப் பொருட்கள், தராசு என்பன அவரிடமிருந்து மீட்கப்பட்டன.

குறித்த சந்தேகநபரை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை 2 ஆம் திகதி கல்லூரி மைதானத்தில் அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6)

# கொவிட் இடைத்தங்கல் நிலைய முறைகேடு விசாரணை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழில் கொரோனா காலப் பகுதியில் அமைக்கப்பட்ட இடைத்தங்கல் நிலையங்களில் பொருட்கள் காணாமல் போனமை தொடர்பில் மாகாண சுகாதார அமைச்சினால் ஐவர் அடங்கிய விசாரணைக் குழு தமது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

2019 ஆம் ஆண்டு கொரோனா இடர் நிலை ஏற்பட்ட போது கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களை பராமரிப்பதற்காக யாழில் மருதங்கேணி, நிர்வேலி மற்றும் வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் இடைத்தங்கல் முகாங்கள் அமைக்கப்பட்டன.

குறித்த முகாங்களுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், மின்விசிறிகள் ,நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் கொட்டகை அமைப்பதற்கான பிளாஸ்ரிக் தகரங்கள் எனப் பல்வேறுபட்ட பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இவ்வாறான நிலையில் குறித்த இடைத்தங்கல் முகாங்கள் அகற்றப்படும் போது அதிலிருந்த பெறும்தி வாய்ந்த பொருட்கள் மாகாண சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் பொருட்கள் பதிவேட்டில் பதிவின்றிப் பல பொருட்கள் மாயமானதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இந்நிலையில் குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக வடமாகாண சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் தலைமையில் விசாரணைக் குழு நியமிக்கப்பட்ட நிலையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக விசாரணைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் ஐவர் கொண்ட குழு தமது விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-104)

# சங்கானைப் பகுதியில் கடை உடைத்து பணம் திருட்டு

(அராலி)

வலி. மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குள் உள்ள சங்கானை சந்தைக்குள் உள்ள கடையினை உடைத்து 80 ஆயிரம் ரூபாய் பணம் திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்றது. கடையின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் தமது கைவரிசையை காட்டிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் இரண்டு வருடங்கள் தாமதமாகலாம்

## பவ்ரல் அமைப்பு தகவல்

(கொழும்பு)

**ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தல் இரண்டு வருடங்கள் வரை தாமதிக்கும் சாத்தியம் காணப்படுவதாகப் பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள பவ்ரல் அமைப்பின் தலைவர் ரோஹன ஹெட்டியாரச்சி, உள்ளூராட்சித் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை விடுவிப்பதில் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி தடங்கல்களை ஏற்படுத்துகின்றார்.

இவ்வாறான செயற்பாடுகள் சர்வதேச மட்டத்தில் நாட்டுக்கு அவப் பெயரை ஏற்படுத்தும். தற்போதைக்கு மாகாண சபைகள் செயற்படவில்லை.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் உள்ளூராட்சி மன்றங்களும் அதிகாரிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும். பாராளுமன்றம் தற்போதைக்கு ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

அவர் விரும்பிய நேரத்தில் அதனைக் கலைக்க முடியும். இது ஒரு ஆபத்தான போக்காகும். தற்போதைக்கு எல்லை நிர்ணய அறிக்கையை வைத்து உள்ளூராட்சித் தேர்தலுக்காகக் கோரப்பட்டுள்ள வேட்பு மனுக்களை இரத்துச் செய்ய அரசாங்கம் முயற்சிக்கின்றது.

அவ்வாறு இரத்துச் செய்யப்பட்டால், எல்லை நிர்ணய அறிக்கையின் மீளாய்வு நடவடிக்கைகள் நிறைவடைந்து மீண்டும் வேட்பு மனு கோரப்படுவதற்கு இரண்டு வருடங்கள் வரை செல்லும். அவ்வாறான கட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் சுமார் இரண்டு வருடங்கள் வரை பிற்போடப்படலாம்.

இவ்வாறான நிலைமையொன்று ஏற்படுவதைத் தடுக்க அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் என்றும் பவ்ரல் அமைப்பின் தலைவர் ரோஹன ஹெட்டியாரச்சி தொடர்ந்தும் வலியுறுத்தியுள்ளார். (நி)


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**12, அந்திரான் ஒழுங்கை, வட்டாரம் -01**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் -01 , அந்திரான் ஒழுங்கை ஒழுங்கையிலுள்ள இல 12 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் V.சிற்றம்பலம் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **கதிரவேலு சிவகுரு மகள் இராசம்மா** ஆகியவர் தனது பேரன் முறையினரான வினாசித்தம்பி சிற்றம்பலம் என்பவர் அவரது சகோதர சகோதரிகளையும் தன்னையும் குறித்த ஆதனத்தில் வாழுமாறு கூறி குறித்த ஆதனத்தை தனக்கே வாய்மொழி மூலம் நன்கொடையளித்திருந்தார் என்றும், அதன் பின்னர் தான் தனது சொந்த ஆதனமாக ஆண்டனுபவித்து வருவதாகவும், குறித்த ஆதனம் 40 வருடங்களுக்கு மேலாக தன்னால் தங்கு தடையற்று ஆட்சி செய்யப்பட்டு வந்தது எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு கி.வைரமுத்து முகதாவில் 1478/27.04.1993 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

**தெய்வேந்திரம் வினோதன்** பிரசித்த நொத்தாரிசு தில்லைநாதன் அருச்சுனா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 517/17.06.2018 ஆம் இலக்க உறுதியால் குறித்த கதிரவேலு சிவகுரு மகள் இராசம்மா ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**இரத்தினதுரை சிவகுமாரும் பெண் நந்தினியும்** பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2226/06.12.2020 ஆம் இலக்க உறுதியால் குறித்த **தெய்வேந்திரம் வினோதனும் , கதிரவேலு சிவகுரு மகள் இராசம்மாவும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **இரத்தினதுரை சிவகுமாரும் பெண் நந்தினியும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **இரத்தினதுரை சிவகுமாரும் பெண் நந்தினியும்** ஆகியவர்களுக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த் ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். (14759)

**தவிசாளர்/ செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**



## மணிவிழா வாழ்த்து

திருமதி. **அறிவழகி ஸ்ரீஸ்கந்தராசா**

பீ.ஏ.சிறப்பு புவியியல் ஆசிரியை யா/நல்லூர் இந்து பெண்கள் கல்லூரி (மங்கையற்கரசி)




Best Wishes

"தொட்டனைத் தூறும் மணற்கேணியெனக்-
கற்றனைத்தூறும் கல்விதனை - முப்பதொடு
மூவாண்டாய் மாணவர்களுளத்தில் கற்றுக்கொடுத்த-
கலைமாணிச்சோதரியே -சமூகக்
கல்வியுடன் புவியியல் துறை நும்மாணவர்கள்-நும்
ஆயுள் வாழ்வை பல்லாண்டு காலம் வாழ்த்தும்
வேளை நாயகனின் அழகியென்றும் பல்லோரால் அறிவு
என்றும் அழைத்திட்டு வந்த வேளை- நாமும்
இம் மணிவிழா நன்னாளில் தமிழ்த் தெய்வம்
நல்லைக் கந்தனையும் நற்கருணை பொழியும் எம்
குல தெய்வம் முடிப்பிள்ளையாரையும் வேண்டி
பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்."

வாழ்த்துவோர்- திரு.திருமதி.பாலசுப்பிரமணியம் J.P (வேலணை பாலா)குடும்பத்தினர்.



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1996 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 2
கி.பா:23 ¼ சூரி 10செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc Engineering Teaching Assistant
எதிர்பார்ப்பு:பல்கலைக்கழக பட்டதாரி
தொ.இ: B/13363

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 4 ½ சூரி 12 செவ் 3 இல்
உயரம்: 5'9"
தகைமை/ தொழில்:Associate Manager
எதிர்பார்ப்பு:பட்டதாரி / படித்த பெண்
உள்நாடு மட்டும்
தொ.இ: B/13364

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்: பரணி 2
கி.பா:சூரி 4 செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/ தொழில் O/L கடைசொந்தத்தொழில்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
உள்நாடு மட்டும்
தொ.இ: B/13365

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அனுசம் .1
கி.பா: சூரி 9 செவ் 10 இல்
தகைமை/தொழில்: உயர்தரம் (அவுஸ்திரேலியா)
எதிர்பார்ப்பு: படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/13367

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 2
கி.பா:சூரி 8 செவ் 10 இல்
உயரம்: 153 cm
தகைமை/ தொழில்:கல்வியியற் கல்லூரி ஆங்கில பாடஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச தொழில் /வெளிநாடு
தொ.இ:G/13416

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சுவாதி 3
கி.பா:13 ½ சூரி 8 செவ் 5 இல்
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: நிரந்தரத் தொழில் விவாகரத்துப் பெற்றவர்
தொ.இ:G/13417

பிறப்பு:1997 இந்து
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:Master Degree Environ ENTAL SCIENCE BSc in Micro biology and Bio technology
எதிர்பார்ப்பு: உயர் பதவி
தொ.இ: G/13420


பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்:உத்தராடம் 3
கி.பா:சூரி 2 செவ் 3 இல்
உயரம்: 5'1'
தகைமை/ தொழில்: Bcom பட்டதாரி (அரச தொழில்)
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் விவாகரத்தானவர்
தொ.இ: G/13421

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ச் முதல் வாரத்தில் டெக்டோனிக் தகடுகளில் வலுவான நிலநடுக்கம் ஏற்பட அதிக வாய்ப்பு

## ஈராக் பல்லைக்கழக புவியியலாளர் அதிர்ச்சிக் கணிப்பு




(பாக்தாத்)

**மார்ச் முதல் வாரத்தில்,பூமியின் டெக்டோனிக் தகடுகளில் வலுவான இயக்கங்கள் ஏற்படக்கூடும் என ஈராக்கில் உள்ள பாக்தாத் பல்கலைக்கழகத்தின் புவியியலாளர் ஒருவர் கணித்துள்ளார்.**

பூமிக்கும் செவ்வாய் கிரகத்துக்கும் இடையே சந்திரன் வரும்போது டெக்டோனிக் தகடுகளில் ஏற்படும் அழுத்தம் காரணமாக வலுவான நிலநடுக்கங்கள் ஏற்பட அதிக வாய்ப்புகள் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

துருக்கிய - சிரிய எல்லையில் நிலநடுக்கத்தை முதலில் கணித்த நெதர்லாந்து விஞ்ஞானி ஃபன்சா ஹ்கெர்பீட்ஸ்ம் இதே கருத்தை ஒரு டுவீட்டில் தெரிவித்தார்.

இருப்பினும், கிரக நிலைகளின் அடிப்படையில் பூகம்பங்களை கணிப்பது பூகம்பங்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுருக்களுக்கு முரணானது என்று அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானிகள் கருதுகின்றனர். (நி)

## இந்தியாவிற்கு வருகை தந்து

# வீதியோர தேநீர் கடையில் தேநீர் குடித்த ஜேர்மன் ஜனாதிபதி

## வைரலாகும் புகைப்படங்கள்



(டில்லி)

இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜேர்மன் ஜனாதிபதி ஓலாப் ஸ்கால்ஸ் புதுடில்லியில் உள்ள சாலையோர டீக்கடையில் டீ குடித்த புகைப்படம் சமூகவலைத் தளங்களில் வைரலாகி வருகிறது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 25 ஆம் திகதி இந்தியாவிற்கு வந்த ஜேர்மன் ஜனாதிபதி ஓலாப் ஸ்கால்ஸ், ராஷ்டிரபதி பவனில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தார். இதனையடுத்து, ராஷ் டிரபதி பவனில் அவரது சம்பிரதாய வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

இந்தியாவுடன் புதிய தொழில்நுட்பங்கள், சுத்தமான எரிசக்தி மற்றும் வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட பல்வேறு இருதரப்பு மற்றும் புவி-அரசியல் பிரச்சினைகள் குறித்தும் ஷோல்ஸ் விவாதிக்க உள்ளார்.

இந்நிலையில், புதுடில்லி, சாணக்யபுரியின் தெருமுனையில் உள்ள ஒரு கடையில் ஜேர்மனி ஜனாதிபதி டீ குடித்தார். டீயின் ருசி மிகவும் அருமையாக உள்ளதாக தெரிவித்துள்ளார்.

தற்போது இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. இதைப் பார்த்த இந்திய மக்கள் சற்றே நெகிழ்ச்சி அடைந்து கொமெண்ட் செய்து வருகின்றனர். (4)

# துருக்கியில் மீண்டும் நிலநடுக்கம்

## ஒருவர் உயிரிழப்பு



(அங்காரா)

துருக்கியில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக, சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கம் மலாத்யா மாகாணத்தில் உள்ள யெசிலியூர்ட் நகரத்தை மையமாகக்கொண்டது என்று நாட்டின் பேரிடர் மேலாண்மை நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், மூன்று வாரங்களுக்கு பிறகு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 5.6 ரிக்டர் அளவுகோலில் பதி வானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6 ஆம் திகதி தெற்கு துருக்கி மற்றும் வடக்கு சிரியாவின் சில பகுதிகளை உலுக்கிய சக்திவாய்ந்த நில நடுக்கத்தில் கடுமையாக பாதிக்கப்பட்ட 11 துருக்கிய மாகாணங்களில் மாலத்யா வும் ஒன்று.

நேற்று முன்தினம்ஏற்பட்ட நிலநடுக்கத்தில் நகரத்தில் பல கட்டடங்கள் இடிந்து விழுந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.(நி)

# உலகப் பணக்காரர்களின் பட்டியலில் மீண்டும் முதலிடத்தை தனதாக்கிய எலான் மஸ்க்



(வோஷிங்டன்)

உலகப் பணக்காரர்களின் பட்டியலில் மீண்டும் முதலாவது இடத்தை எலான் மஸ்க் கைப்பற்றியுள்ளார்.

ப்ளூம்பெர்க் நிறுவனத்தின் அண்மைய மதிப்பீட்டில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெஸ்லா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான எலான் மஸ்க் கடந்த ஆண்டு டிசெம்பரில் முதலிடத்தை இழந்து இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டிருந்தார்.

இதனால் பிரான்ஸ் சொகுசுப் பொருள் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான பெர்னார்ட் ஆர்னால்ட் உலகப்பணக்காரர்களின் பட்டியலில் முதலாவது இடத்தை பிடித்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் டெஸ்லா நிறுவனப் பங்குகளின் விலை உயர்ந்து, மஸ்க் மீண்டும் உலகப் பெரும் பணக்காரர் ஆனார்.

அந்தவகையில், தற்போது எலான் மஸ்க் இன் சொத்து மதிப்பு 187. 1 பில்லியன் டொலராகவும் ஆர்னால்ட்டின் சொத்து மதிப்பு 185.3 பில்லியன் ஆகவும் உள்ளது. (நி)

# சீனாவில் ஆய்வகத்தில் இருந்தே கொரோனா வைரஸ் கசிந்துள்ளது

## அமெரிக்கா தகவல்

(வோஷிங்டன்)

கொரோனா தொற்றுநோய் பெரும்பாலும் சீனாவில் உள்ள ஆய்வக கசிவிலிருந்து வெளியானதாக அமெரிக்க எரிசக்தி துறை தகவல் வெளியிட்டுள்ளது.

புதிதாக புதுப்பிக்கப்பட்ட இரகசிய உளவுத்துறை அறிக்கையின்படி இந்த தகவல் வெளியாகியுள்ளது.

வுஹானில் உள்ள ஒரு ஆய்வகத்திலிருந்து கொரோனா வைரஸ் தற்செயலாக கசிந்தது என்று குறைந்த நம்பிக்கை இருப்பதாக அமெரிக்க உளவுத்துறை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழமையாக, புலனாய்வு அமைப்புகள் குறைந்த, நடுத்தர அல்லது அதிக நம்பிக்கையுடன் மதிப்பீடுகளைச் செய்யலாம்.

குறைந்த நம்பிக்கை மதிப்பீடு என்பது பொதுவாக பெறப்பட்ட தகவல் போதுமான நம்பகமானதாக இல்லை அல்லது மிகவும் உறுதியான முடிவை எடுக்க போதுமான தகவல்கள் இல்லை என்பதாகும். அமெரிக்க எரிசக்தி துறையின் புதிய அறிக்கையை வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் முதலில் வெளியிட்டது.

அமெரிக்க தேசிய புலனாய்வு இயக்குந ரின் அலுவலகத்தின் கீழ் செயற்படும் 18 அரசு நிறுவனங்களில் எரிசக்தி துறையின் உளவுத்துறை மற்றும் எதிர் நுண்ணறிவு அலுவலகம் ஒன்றாகும். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## இஞ்சி



Botanical Name-Zingiber officinale
Family-Zingiberaceae

இஞ்சி ஒரு கற்ப மருந்து. இது கண்களுக்கு நலத்தைக் கொடுக்கும். கபக் குற்றத்தை போக்கும். இஞ்சி ஓர் ஓராண்டுச் செடி. அகன்ற, நீண்ட இலைகளைக் கொண்டது. இஞ்சியில் கணுக்கள் இருப்பதால் இஞ்சியை தரை மட்டத் தண்டு எனலாம்.

தேனில் இஞ்சியை தோல் நீக்கி கீற்றுக் கீற்றாக கீறி ஊற விட்டு கற்ப முறைப்படி தினந்தோறும் ஒரு தேக்கரண்டி உண்டால் நரை, திரை, மூப்பு இன்றி வாழலாம்.

தேகமும் அழகு பெறும். மனோபலம் உண்டாகும். நெற்பொரிமாவுடன் பசுவின் நெய் சமன் கலந்து ஆகாரத்திற்கு பதிலாக உண்ண வேண்டும். இஞ்சியானது பூக்கும் ஒரு வித்திலைத் தாவரமாகும். பல்லாண்டு வாழும் செடியாயினும் ஓராண்டில் இஞ்சிக் கிழங்கு முற்றி விடுவதால் தரையின் மேல் வரும் தண்டும் இலைகளும் காய்ந்து விடும். ஆகவே இது ஓராண்டுச் செடியாகும். இஞ்சியின் மேற்றோலை நீக்கிய பின்பு கல்சியம் சல்பேற் அல்லது கல்சியம் காபனேற்று இடப்பட்டு உலர்ந்த பின்பு கிடைப்பது சுக்கு. இரண்டுமே மருத்துவ குணம் மிக்கவை.இஞ்சியை தோல் நீக்கி, சீவி, இடித்து; சாறு பிழிந்து 750 மில்லி அளவு எடுத்து 500 கிராம் சீனியை சிறிது நீரில் கலந்து அடுப்பில் வைத்து சர்பத் பதமாக காய்ச்சி எடுக்க வேண்டும். அதில் ஒரு தேக்கரண்டி அளவு குழந்தைகளுக்கும் மூன்று தேக்கரண்டி அளவு பெரியவர்களுக்கும் கொடுக்க சீரணசக்தி, பசி ஏற்பட்டு வாய்வு கலையும்.

இதேபோல் சீனிக்குப் பதில் பனை வெல்லம் எனும் கருப்பட்டியை சேர்த்து அல்வா போல கிண்டி எடுத்து ஆறியதும் வில்லைகளாக நறுக்கி வைத்துக் கொண்டு பயன்படுத்தினாலும் மேற்கூறிய பயன்களைத் தரும்.

இஞ்சியை தோல் சீவி பசுப்பால் விட்டரைத்து 2 கிராம் அளவு 8 மில்லி பசுவின் பாலில் (காய்ச்சிய) கலந்துண்ண வயிற்றுப்புண், குடல் அழற்சி,வாய்வு குணமாகும்.

நீரிழிவு நோயாளிகள் தினமும் இஞ்சிச் சாறு 5 மில்லி அளவு அருந்த நா வறட்சி, உடல் களைப்பு நீங்கும்.இஞ்சியை தோல் நீக்கி வாயில் போட்டு மென்று உமிழ் நீரை துப்ப தொண்டைப்புண், குரக்கம்மல் இவைகள் குணமாகும்.

செரியாக் கழிச்சலுக்கு இஞ்சிச் சாற்றை தொப்புளைச்சுற்றி தடவலாம். இஞ்சிச்சாறு 10 மில்லி, வெங்காயச்சாறு 10 மில்லி. கலந்து உண்ண வாந்தி,ஓங்காளம் நீங்கும்.இஞ்சிச்சாறு ஒரு மேசைக்கரண்டி, ஈரவெந்தயச்சாறு ஒரு மேசைக்கரண்டி , எலுமிச்சம்பழச் சாறு ஒரு மேசைக்கரண்டி இம் மூன்றையும்கலந்து காலை, மாலை 3 நாட்கள் அருந்த ஆஸ்மா குணமாகும்.

இஞ்சியின் மேலுள்ள தோலை நீக்கி விட்டுச் சுத்தம் செய்து சிறு சிறு துண்டுகளாக நறுக்கி 200 கிராம் இஞ்சியை 300 கிராம் தேனில் ஊற வைக்க வேண்டும்.2 வாரம் ஊறிய பின்பு ஒரு தேக்கரண்டி அளவு காலை, மாலை சாப்பிட அஜீரணம், பசி, மந்தம், மலச்சிக்கல் நீங்கி, இரத்தம் சுத்தமாகும், வாய்வுக் கோளாறுகள் நீங்கும்,பற்களுக்கு உறுதியளிக்கும்.

இஞ்சியை தோல் நீக்கி சிறுசிறு துண்டுகளாக நறுக்கி உப்புடன் கலந்து ஊறப் போட வேண்டும். நாள்தோறும் குலுக்கி, குலுக்கி வெயிலில் வைத்த எடுக்க வேண்டும். நன்றாக ஊறிய பின்பு தினசரி ஊறுகாய் போல் உணவுடன் சில துண்டுகளை சாப்பிடலாம்.

இதனால் வாத, பித்த கப நோய்கள் வராமல் தடுப்பதோடு ஜீரண மண்டலத்தை பலப்படுத்தக் கூடியதாகவும் இருக்கும்.

இஞ்சியை தோல் சீவி சிறுசிறு துண்டுகளாக நறுக்கி நெய்யில் பொரித்தெடுத்து உலர்த்தி, பொடித்து போத்தலில் போட்டு கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

சமிபாடின்மை, சுவையின்மை, வயிற்றுப் பொருமல், ஓங்காளம் போன்றவற்றுக்கு 4 கிராம் அளவு வெந்நீரில் எடுக்க நல்ல குணம் கிடைக்கும். ''காலையில் இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலையில் கடுக்காய்'' மண்டலம் உண்ண நூறாண்டு காலம் வாழலாம் என்பது அனுபவபூர்வமாக அறிந்த உண்மை.

ஜீவசத்துக்கள் சிதைக்கப் படாமல் , இரசாயனங்கள் கலக்கப்படாமல் கிடைக்கும் வெல்லத்துடன் ஆயுளைக் கூட்டவும் பித்தத்தை தணிக்கவும் இளநரையை இல்லாமல் செய்யவும் இஞ்சியும் பசுவின் பாலும் கலந்து பருகுதலே சிறப்பாகும். இது காலை அருந்த வேண்டிய பானமாகும். இஞ்சிச் சாறு, தேன் ,வெங்காயச் சாறு ஒரு தேக்கரண்டி அளவு கலந்து தினமும் காலையில் அருந்த சளி, இருமல் தணியும்.

இஞ்சிச் சாற்றில் நாவல் விதைப்பருப்புகளை ஊறவைத்து சாறு சுவறி உலர்ந்ததும் பொடித்து 2 கிராம் அளவு சாப்பிட்டு வர நீரிழிவு குணமாகும்.இஞ்சியை தோல் நீக்கி கொத்தமல்லி சேர்த்து துவையல் செய்து சாப்பிட்டு வர வயிறு இரைச்சல் குணமாகும். இஞ்சியை தோல் நீக்கி, தண்ணீரில் போட்டுக் காய்ச்சி அதில் 2 கப் பசுவின் பால், ஏலக்காய் பொடி, சிறிது குங்குமப்பூ, கற்கண்டு ஆகியவற்றை கலந்து குடித்தால் உடல் வனப்பு பெறும். இளமையும் பேணப்படும். உணவுகளுக்கு வாசனையூட்டக் கூட இஞ்சியை பயன்படுத்தலாம். உணவுடன் சேர்த்தே இஞ்சியை எடுக்கும்போது எத்தனையோ நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# பொழுதொரு போர் செய்வோம்: நுளம்புகளின் பிரகடனம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எப்படியிருக்கின்றீர்கள். நலமாக இல்லையா? கவலையாக இருக்கின்றது. நீங்கள் நலமாக இருந்தால் தானே எங்களுக்கு தேவையான இரத்தத்தை வேண்டிய நேரத்தில் உங்களுக்கு அதிகம் தொல்லை தராமல் நாங்கள் பெற்றுக் கொள்ள முடியும். எங்களை நம்புங்கள். உங்களுடைய உடல் ஆரோக்கியத்தில் நாங்களும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம். என்ன செய்வது மாடுகள். பூனைகள்,நாய்களில் இப்போதெல்லாம் நல்ல இரத்தம் ஓடுவதில்லை. அவற்றுக்கு சாப்பாடும் சரியாக கிடைப்பதில்லை.

நாங்கள் சுவையை வைத்தே இவை எல்லாவற்றையும் தீர்மானிப்போம். அதனால் கொஞ்சமாவது உங்களது நல்ல இரத்தத்தில் சிறு துளிகளை மாத்திரம் நாங்கள் எடுத்துக் கொள்ள அனுமதி தாருங்கள். இல்லையெனில் நீங்கள் அசந்திருக்கும் இடம் பார்த்து எமது வேலையைக் காட்ட வேண்டியிருக்கும். உங்களின் அனுமதி பெறாமல் இரத்தத்தை உறிஞ்சுவது சட்டத்திற்கு புறம்பான செயலென உள்ளக சபை உறுப்பினர்கள் கண்டு பிடித்திருக்கிறார்களாம். எவர் கூறினாலும் எந்தச் சட்டத்தை போட்டாலும் எங்களது வாழ்வாதாரப் பிரச்சினை என்னும் போது நாம் எவர் சொல்லையும் கேட்க மாட்டோம். அதனால் பொழுதொரு சமர் செய்ய வேண்டியதாயிற்று.எமக்குஉங்களை விட்டால் யார் இருக்கின்றார்கள்? நல்ல இரத்தத்தைத் தேடி நாம் எவ்வளவு தூரத்திற்கு அலைவது? சிலருடைய இரத்தத்தில் சுவை யில்லை. கசக்கின்றது. அதில் இனிப்பு சுவையதிகமாகி அது நோய்வாய்ப்பட்ட இரத்தமாக இருக்கின்றது. உணவை உண்ணும் போதாவது கவனமாக இருந்தால் ஏன் அவர்களது இரத்தத்தில் இனிப்பு அதிகமாகப் போகின்றது. இனிப்பு அதிகமானாலும் எம்மால் உறிஞ்சிக் குடிக்க முடியவில்லை. எமது சந்ததியும் இனிப்பு அதிகமான இரத்தத்தை குடித்து நோய்வாய்ப்பட ஆரம்பித்திருக்கின்ற செய்தி எமக்கு பேரிடியாகும். கொஞ்சமாவது சமூக அக்கறையுடன் உங்கள் உடல்நலத்தைப் பேண இன்னமும் சிந்திக்காமல் இருந்தால் எப்படி? சிலருடைய இரத்தம் வெறும் தண்ணீராக இருக்கின்றது. ஊட்டச்சத்து என்று எதுவும்இல்லாதிருக்கின்றது. பெரும் கஞ்சத்தன்மை கொண்டவர்கள் போலும் எமக்குத் தேவையாக சமனான உணவும் ஊட்டச்சத்தான உணவும் உங்களின் இரத்தம் மட்டுமே. அதனை நீங்கள் எமக்கு தர மறுப்பது இழிசெயலாகும். முன்பெல்லாம் எவ்வளவு தாராள மனப்பாங்கு உங்களுக்கு. வேண்டியளவு இரத்தத்தை நாம் உறிஞ்ச அனுமதித்த நீங்கள் நாட்டின் பொருளாதாரம் சுருங்கியவுடன் எமது உணவுக்கும் ஆப்பு வைத்து விட்டாயிற்றே. நாம் என்ன செய்வது.

மலேரியா நுளம்புகளை மருந்து வைத்தும் விசிறியும் அழித்தே விட்டது போல டெங்கு நுளம்புகள் எங்களையும் அழிக்கப் பார்க்கின்றீர்களா? வெட்ட வெட்ட தளைப்பது போல எம்மை எந்த வழியில் அழித்தாலும் நாமும் மீண்டும் மீண்டும் பல்கிப் பெருகுவோம். அதற்காக பலர் எங்களுக்கு உதவியும் செய்கின்றார்கள். அவர்களுக்கு நாம் என்றும் கடமைப் பட்டவர்களாவோம்.

வீடுகளில் பூமரங்களை சாடிகளில் வைத்திருப்பவர்கள் நாம் வாழ்வதற்காக நீரை இறைத்து ஒருநாள் வரை வடிந்து விடாது வைத்திருப்பார்கள். அந்தக் கால அளவு எமக்கு போதும். முட்டையிட்டு எமது இளஞ்சந்ததி பெருகி விட. மறுநாளும் நீரூற்றும் புண்ணியவான்கள் இருக்கும் வரைக்கும் எமக்கு என்றென்றும் அழிவேயில்லை. வீடுகளில் வீட்டுத் தோட்டமென்று உருவாக்கி அவ் விடங்களில் சிரட்டைகள், பொலித்தீன் பைகள் மற்றும் பழைய பேணிகள் என அவற்றை விட்டு வைத்திருக்கும் போது தண்ணீர் ஓரளவு தேங்கினாலே போதும் அவற்றில் நாம் வசதியாக முட்டையிடலாம். இன்னும் தற்போது வரும் ஒரு நாள் பிளாஸ்ரிக் கப்புகள் ஆங்காங்கே சிதறிக் கிடந்தால் இன்னும் எமக்கு வசதியாக போய்விடும். எங்களில் பெண் நுளம்புகள் தான் மனிதரைக் குத்தி இரத்தத்தை உறிஞ்சுபவர்கள். உங்களில் வீடுகளிலும் அதுதானே நடக்கின்றது.

ஆண் நுளம்புகள் மனிதரைக் குத்தி இரத்தத்தைக் குடிப்பதில்லை. மாறாக பூக்களில் உள்ள தேனை உறிஞ்சிக் குடிப்பன. ஆதலினால் ஆண் நுளம்புகள் மனிதர்களுக்கு தீங்கு விளைவிப்பதில்லை. நித்தியகல்யாணி. நந்தியார்வட்டை இன்னும் பல பூக்களுக்கு காலைப் பொழுதில் ஆண் நுளம்புகள் படையெடுத்து பூக்களில் அரும்பும் தேன் சுரப்பை அருந்துவதை அவதானியுங்கள்.

டெங்கு வைரஸினை மனமார பரப்பும் நுளம்புகளான எமக்கு அதிகாலையும் மாலைப் பொழுதும் ரம்மியமான காலங்கள். அந்த பொழுதில் தான் எமது வீட்டு பெண் நுளம்புகள் வீட்டைவிட்டு அதிக எண்ணிக்கையில் படையெடுத்து மனிதர்களைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சுவதோடு டெங்கு வைரஸினையும் பரப்பி விடுகின்றன.



## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

இதனை நாம் செய்ய வேண்டுமென ஒருபோதும் செய்வதில்லை. மாறாக டெங்கு வைரஸ் எம்மை தங்களை மனிதரின் உடலில் உட்செலுத்துவதற்கு கருவியாகப் பயன்படுத்துகின்றன. எமக்கும் இதில் விருப்பமில்லை. என்றாலும் எம்மை அறியாமல் செய்யும் இதற்கு நாம் என்றுமே பொறுப்பானவர்களல்ல. எமக்கு டெங்கு வைரஸினை உங்கள் உடலினுள் செலுத்தாமல் இரத்தத்தை உறிஞ்சத் தெரியாது. அப்படி ஏதும் தொழில்நுட்பம் தெரிந்தால் எங்களுக்கும் சொல்லித் தாருங்கள். அதனை நாம் பின்பற்றுகின்றோம். ஏதோ விஞ்ஞானத்தை வைத்து நாம் குத்தியுறிஞ்சினாலும் டெங்கு வைரஸ் தொற்று ஏற்படாமல் செய்ய இன்னுமொரு தொழில்நுட்பத்தை கண்டுபிடியுங்களேன் பார்ப்போம்.

மனிதர்களே! வாருங்கள் நுளம்புகளான நாங்களும் நீங்களும் இணைந்து ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உருவாக்கிக் கொண்டால் மனிதர்கள் டெங்கு நோயிலிருந்து தப்பிப்பதற்கான வழிவகைகளுக்கு நாமும் உங்களுக்கு ஒத்தாசை புரியலாம். புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தான் உங்களுக்க பழக்கமான. வழக்கமான சமாச்சாரமாச்சே. ஏனென்றால் நீங்கள் ஒருபோதும் அதனைக் கடைப்பிடிப்பதேயில்லை. புதுப்பிப்பதுமில்லை. இனியென்ன எமக்கு என்றும் கொண்டாட்டம் தான். ஒன்றை மட்டும் நினைவில் வைத்திருங்கள். புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு நீங்கள் வரா விட்டால் நாம் முன்பே அறிவித்ததன் படி காலை மற்றும் மாலைப் பொழுதுகளில் எம்முடனான சமருக்கு தயாராகுங்கள். நாங்கள் எப்போதுமே ரெடியாகவே இருக்கின்றோம்.



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க

# விமான நிலையத்தில் கடைத்தொகுதி

## வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா

(அராலி)

**வடமாகாண சிறு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிக்க யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தில் நிரந்தர விற்பனைத் தொகுதி விரைவில் அமைத்துக் கொடுக்கப்படும் என வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.**

நேற்று செவ்வாய்க்கிழமை வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில், ஆளுநர் செயலக வழிகாட்டலில் உள்ளூர் உற்பத்திகளின் விற்பனைக் கண்காட்சியை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூர் சிறு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கும் சிறந்த சந்தை வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதற்கும் பல்வேறு வேலை திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் வட மாகாண சிறு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை கொழும்புக்கும் சர்வதேச மட்டத்துக்கும் எடுத்துச் செல்வதற்கு யாழ். சர்வதேச விமான நிலையத்தில் நிரந்தர உற்பத்தி கூடாரத்தை அமைக்க திட்டமிட்டுள்ளோம்.

அதே போன்று கொழும்பில் உள்ள எமது அலுவலகத்திலும் உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் தொடர்பில் விளம்பரப்படுத்தி ஓடர்களை வடக்கில் இருந்து அனுப்பக்கூடிய வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என மேலும் தெரிவித்தார். (4-6-104)



கிளிநொச்சி பிரமந்தனாறு பிரதேச மருத்துவமனைக்கு இரண்டு இலட்சம் பெறுமதியான குழந்தைகளுக்கான மருந்துப் பொருட்கள் கடந்த 26 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டது.

இதற்கான நிதி உதவியை இங்கிலாந்து தேசத்தில் உள்ள பரியோவான் கல்லூரி பழைய மாணவன் பத்மநாதன் மற்றும் அவரின் குடும்ப உறவுகளால் வழங்கப்பட்டது.(படம்:சிவசாந்தன்)



சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியா கோதண்டர் நொச்சிக்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலய கட்டடப் பணிக்காக 50 ஆயிரம் ரூபாய் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. அதேவேளை முல்லைத்தீவில் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றிற்கு வீடு கட்டுமானத்திற்காகவும் 50 ஆயிரம் ரூபாய் நிதியை வழங்கி வைத்தது.

### ஒவ்வொரு மாத இறுதியிலும்

# சிறு உற்பத்திகளின் கண்காட்சியும் விற்பனையும்

## மன்னார் பிரதேச செயலர்

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், பிரதேச மட்ட சிறு கண்காட்சி மற்றும் விற்பனை ஒவ்வொரு மாதமும் கடைசி திங்கட்கிழமை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை பிரதேச மட்ட சிறு கண்காட்சி மற்றும் விற்பனையை ஆரம்பித்து வைத்த பின் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மன்னார் நகர சபையின் உதவியுடன் மன்னார் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப் படுத்தும் வகையில் குறித்த கண்காட்சி மற்றும் விற்பனை ஒவ்வொரு மாதமும் கடைசி திங்கட்கிழமை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (4-6-285)

# ஆலய உண்டியல் உடைத்து பணம் திருட்டு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை வடக்கு வேம்பிராயில் அமைந்துள்ள கல்லடிப்பிள்ளையார் ஆலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு திருட்டு இடம்பெற்றிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது ஆலய வளாகத்தில் காணப்பட்ட இரண்டு உண்டியல்களை உடைத்து அதிலிருந்த பணத்தை திருடிச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த திருட்டுச் செயல் ஆலயத்தில் இருந்த பாதுகாப்பு கமராவில் பதிவாகியுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)



இருபாலை கிழக்கு, கேணிக்குளம்பதி அருள்மிகு லிங்க விநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ பாஸ்கரன் கேசவன் அகில இலங்கை சமாதான நீதவானாக நீதி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

### பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களுக்கு

# 10 கிலோ அரிசி வழங்க தீர்மானம்

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் சமுர்த்தி பெறும் 22 ஆயிரத்து 454 பேருக்கும் காத்திருப்போர் பட்டியலில் உள்ள 6 ஆயிரத்து 150 பேருக்கும் அரசாங்கத்தின் உணவுப்பாதுகாப்பு வேலைத் திட்டத்தின் கீழ் 10 கிலோ அரிசி வீதம் வழங்கப்படவுள்ளதாக மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கும் போது, அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் கீழும் விவசாயிகளுக்கான நிவாரணம் வழங்கும் முகமாகவும் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யும் அடிப்படையிலும் நெல் கொள்வனவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த அடிப்படையிலேயே ஒரு இலட்சம் கிலோ வரையான நெல் இதுவரை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக நெல்லை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன

அதேவேளை இந்த நெல்லை பாரிய மற்றும் நடுத்தர அரிசியாலைகள் மூலமும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் அரிசியாலைகள் ஊடாகவும் கொள்வனவு செய்து அரிசியாக்கி இந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய வறிய குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-315-316)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் தி.வரதன் தலைமையில் இடம்பெறும். (4)

# சட்டவிரோத மணல் அகழ்வு இருவர் பொலிஸாரால் கைது

(முறிகண்டி)

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புலோப்பளை கிழக்கு பகுதியில் இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கு அமைவாக தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது, குறித்த அகழ்வில் ஈடுபட பயன்படுத்தப்பட்ட இரு உழவு இயந்திரங்களும் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். (4-6-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 122

# ஒரு பயண அனுபவம்




சென்னை விமான நிலையத்திலிருந்து பலாலி சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்கிய பயணி ஒருவரின் அனுபவம். சென்னை விமான நிலையத்தில், அங்கிருந்த அறிவிப்பு காட்சிப்பலகையில் துபாய், சிங்கப்பூர், சாஜா கொழும்பு, கோலாலம்பூர் ஆகிய பெயர்களின் அதே சமவரிசையில் யாழ்ப்பாணத்தின் பெயரும் இடம் பெற்றிருந்தது. அதைப் பார்க்கும்போதே ஒரு இனம் புரியாத சந்தோஷம். ஈழத்தமிழர்களின் எத்தனை ஆண்டு காலக் கனவு இது... யாழ்.சர்வதேச் விமான நிலையத்தை சாத்தியமாக்கித் தந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் அவரது அரசாங்கத்திற்கும் நாமெல்லாம் முதலில் நன்றி சொல்ல வேண்டும். முன்னர் பலாலி இந்திய விமான சேவை இருந்தது.. ஆனால் சர்வதேச தரவரிசையில் பலாலி விமான நிலையம் இருக்கவில்லை.

யாழ்ப்பாணம் செல்லும் பயணிகள் - சென்னை அண்ணா விமான நிலையத்தில் - ஒரு பஸ் மூலம் ரன்வேக்கு அழைத்துவரப்பட்டு விமானத்தில் ஏற வைக்கப்பட்டார்கள். வலது காலை எடுத்து வைத்து விமானத்துள் ஏறினேன்.

குறித்த பயணம் மேற்கொள்ளும் விமானம் ஒரு சிறிய விமானம். இருபுறமும் விசிறிகள் கொண்ட பழைய கால விமானம் அதில் 72 பயணிகளுக்குக்குத்தான் இருக்கைகள் உண்டு. நான் வந்த விமானத்தில் பயணித்தவர்களில் அனைவரும் ஈழத் தமிழர்கள்.

விமானத்துள் ஹிந்தி, ஆங்கிலம் மற்றும் தமிழிலும் அறிவிப்புக்களைச் செய்தார்கள். சென்னையிலிருந்து புறப்பட்டு வெறுமனே ஒரு மணித்தியாலமும் 15 நிமிட நேரப்பயணத்தில் யாழ்ப்பாணத்தை அடைந்தாயிற்று.

விமானம் கீழிறங்கும்போது வானத்திலிருந்து பார்த்தேன்.. அமைதி... யாழ்.பகுதியின் வயல்கள், மரங்கள்,பனைகள், அடக்கமான கட்டிடங்கள்.. ஆங்காங்கே கோயில்கள், அவற்றின் கோபுரங்களின் அழகை ரசித்த வேளை விமானம் தரை இறங்கியது.

விமானத்திலிருந்து இறங்கும்போது நீல் ஆம்ஸ்ட்ரோங் நினைப்பு வந்தது. அவ்வளவு ஒடுக்கமான ஏணிப்படி.. விமான த்திலிருந்து அனைவரும் இறங்கியதும் சொகுசு பஸ் ஒன்று பயணிகளை ஏற்றி வந்து யாழ்ப்பாண சர்வதேச விமான நில்யத்தின் வருகை, குடிவரவு கட்டடத்துள் விட்டுவிட்டது. சிறியதொரு கட்டிடம் அது. இந்தோனேஷியாவில் பல சிறிய விமான நிலையங்கள் இப்படித்தான் இருக்கும்..

எனக்கான குடிவரவு சம்பிரதாயங்கள் முடிவடைந்ததும் அதே கட்டிடத்தின் ஒரு மூலையில் கொணர்ந்து வைக்கப்பட்டிருந்த எனது சூட்கேஸ்களை எடுத்துக் கொண்டு கட்டத்திற்கு வெளியே வர.. எனது தம்பி அங்கு எனக்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

**அன்பு வாசகர்களே!**
**முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.**

## இந்திய மீனவர்களை தாக்கியதற்காக இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டம்

(டில்லி)

**எல்லை கடந்து இலங்கை இராணுவம் இந்திய மீனவர்களை தாக்கியதற்காக மே 17 'இயக்கம்' இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியது.**



சென்னை நுங்கம் பாக்கத்தில் நேற்று இலங்கை தூதரகம் அருகே திருமுருகன் காந்தி தலைமையில் மே 17 இயக்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எல்லை கடந்து மீனவர்களை தாக்கிய இலங்கை மீது சர்வதேச நீதி மன்றத்தில் வழக்குப் பதிவு செய்ய வேண்டும் எனவும் மீனவர்கள் தாக்குதல் நடத்திய இலங்கையுடன் கூட்டு இராணுவப் பயிற்சி செய்யும் ஒப்பந்தத்தை மத்திய அரசு இரத்துச் செய்ய வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உடனே இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கைகளை முன் வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி)

## பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டம்- அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)



இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை அறிவித்திருந்தார்.

சட்டவரைஞர்களால் உருவாக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைவுக்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்துள்ளது.

அந்தவகையில், இந்த சட்டவரைவை வர்த்தமானியில் வெளியிடவும் அதன் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## ராஜபக்ஷ பட்டாளத்தைக் கூண்டோடு விரட்டுங்கள்
### மக்களிடம் சந்திரிகா கோரிக்கை

(கொழும்பு)



இனி நடைபெறும் எந்தத் தேர்தலிலும் ராஜபக்ஷ குடும்பத்தினரோ அல்லது அவர்களின் உறவினர்களோ அல்லது அவர்களின் நெருங்கிய நண்பர்களோ வெற்றியடைய இடமளிக்கக் கூடாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ பட்டாளத்தை நாட்டு மக்கள் கூண்டோடு விரட்டியடிக்க வேண்டும் எனவும அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் சந்திப்பு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் சொத்துக்களைச் சூறையாடி சுகபோகம் அனுபவித்த ராஜபக்ஷ பட்டாளம் மீண்டும் அதிகாரத்தைக் கையில் எடுக்கத் துடிக்கின்றது.

பிரதமர் பதவி என்ற கதை எமது காதில் கேட்கின்றது. மக்களால் விரட்டியடிக்கப்பட்ட ராஜபக்ஷக்கள் ஏதோவொரு வழியில் மீண்டும் அதிகாரத்தில் அமர படாதபாடு படுகின்றனர்.

இது வெட்கக்கேடு, அவமானம். எந்தத் தேர்தல் நடந்தாலும் ராஜபக்ஷ பட்டாளத்தை நாட்டு மக்கள் கூண்டோடு விரட்டியடிக்க வேண்டும் என தெரிவித்தார். (நி)

## காட்டு யானையுடன் செல்பி; மயிரிழையில் உயிர் தப்பிய ரஷ்ய குடும்பம்

(கொழும்பு)

ரஷ்ய குடும்பம் ஒன்று காட்டு யானையுடன் செல்பி எடுக்க முற்பட்ட போது அவர்கள் பயணித்த வாகனம் ஒன்று தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக மின்னேரியா பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் ஹபரணை - பொலநறுவை பிரதான வீதியின் மின்னேரியா தேசிய பூங்காவிற்கு அருகில் இடம் பெற்றுள்ளதோடு, ரஷ்யக் குடும்பம் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளது. 8 வயதுடைய இரண்டு சிறுவர்கள் மற்றும் 10 மாதக் குழந்தையுடன் ரஷ்யக் குடும்பத்தினர் வாடகை வாகனம் மூலம் பொலநறுவைக்கு சுற்றுலா சென்றுவிட்டு திரும்பி வந்துள்ளனர். அவ்வேளை, மின்னேரியா தேசிய பூங்காவிற்கு அருகில் வீதியில் நின்று கொண்டிருந்த காட்டு யானையின் அருகில் சென்று செல்பி எடுக்க முயற்சித்துள்ளனர். அப்போது கோபம் அடைந்த யானை அவர்களை துரத்தியுள்ளது. உடனே அவர்கள் வாகனத்தில் ஏறி தப்பியுள்ளார்கள். ஆனால் யானை வாகனத்தை அடித்து நொறுக்கியதில் வாகனம் சேதமடைந்துள்ளது. குறித்த குடும்பம் வாடகை வாகனம் மூலம் பொலநறுவைக்கு சுற்றுலா சென்றுவிட்டு திரும்பி வரும் வழியில் இந்தச் சம்பவத்தை சந்தித்ததாக மின்னேரியா பொலிஸார் தெரிவித்தனர். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 115





**இருபத்தாறாம் அத்தியாயம்**
**"அபாயம்! அபாயம்!"**

ஆஸ்தான மண்டபத்தில் புலவர்களுக்கு முன்னதாகவே வந்தியத்தேவன் பிரவேசித்தான். அங்கே ஓர் உயர்ந்த சிம்மாசனத்தில் கம்பீரமாக வீற்றிருப்பவர் தான் சின்னப் பழுவேட்டரையராயிருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டான்.

அவரைச் சுற்றிலும் பலர் கைகட்டி வாய் புதைத்து நின்றார்கள். அன்று வந்த ஓலைகள் பலவற்றை வைத்துக் கொண்டு ஒருவர் நின்றார். கணக்காயர் கணக்குச் சொல்வதற்குக் காத்திருந்தார். காவல் படைத் தலைவர்கள் சின்னப் பழுவேட்டரையருடைய அன்றாடக் கட்டளைகளை எதிர்பார்த்து நின்றார்கள். ஏவிய வேலைகளைச் செய்வதற்குப் பணியாளர்கள் காத்திருந்தார்கள்.

சிம்மாசனத்துக்குப் பின்னால் நின்று சில ஏவலாளர் வெண்சாமரம் வீசிக் கொண்டிருந்தார்கள். கையில் வெற்றிலைப் பெட்டியுடன் ஒருவன் ஆயத்தமாயிருந்தான்.

மிடுக்கிலும் பெருமிதத்திலும் யாருக்கும் பின்வாங்காதவனான வந்தியத்தேவன் கூடச் சிறிது அடக்க ஒடுக்கத்துடனேதான் சின்னப் பழுவேட்டரையரிடம் அணுகினான்.

பெரியவரைக் காட்டிலும் சின்னவர் வீரகம்பீரத்தில் இன்னும் ஒருபடி உயர்ந்தவராகவே காணப்பட்டார். நமது வீரனைப் பார்த்ததும் அவர் முகமலர்ச்சியுடன், "யார், தம்பி, நீ எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டார்.

வீர வாலிபர்களைக் கண்டால் சின்னப் பழுவேட்டரையரின் கடுகடுத்த முகம் மலர்ந்து விடும். நாடெங்கும் உள்ள வாலிப வீரர்களைத் தம்முடைய காவல் படையில் சேர்த்துக் கொள்வதில் அவருக்கு மிக்க ஆர்வம்.

"தளபதி! நான் காஞ்சீபுரத்திலிருந்து வந்தேன்! இளவரசர் ஓலை கொடுத்து அனுப்பினார்!" என்று பணிவான குரலில் வந்தியத்தேவன் மறுமொழி சொன்னான்.

காஞ்சீபுரம் என்றதும் சின்னப் பழுவேட்டரையரின் முகம் கடுத்தது.

"என்ன? என்ன சொன்னாய்?" என்று மீண்டும் கேட்டார்.

"காஞ்சீபுரத்திலிருந்து இளவரசர் கொடுத்த ஓலையுடன் வந்தேன்!"

"எங்கே? இப்படிக் கொடு!" என்று அலட்சியமாய்க் கேட்டபோதிலும் அவருடைய குரலில் சிறிது பரபரப்புத் தொனித்தது.

வல்லவரையன் அடக்க ஒடுக்கத்துடன் ஓலைச் சுருளை எடுத்துக் கொண்டே, "தளபதி! ஓலை சக்கரவர்த்திக்கு!" என்றான்.

அதைப் பொருட்படுத்தாமல் சின்னப் பழுவேட்டரையர் ஓலையை வாங்கி ஆவலுடன் பார்த்தார். பக்கத்தில் நின்றவனிடம் கொடுத்து அதைப் படிக்கச் சொன்னார். கேட்டுவிட்டு, "புதிய விடயம் ஒன்றுமில்லை!" என்று தமக்குத் தாமே முணுமுணுத்துக் கொண்டார்.

"தளபதி! நான் கொண்டு வந்த ஓலை" என்றான் வந்தியத்தேவன்.

"ஓலைக்கு என்ன? நான் கொடுத்து விடுகிறேன் சக்கரவர்த்தியிடம்!"

"இல்லை; என்னையே நேரில் சக்கரவர்த்தியின் கையில் கொடுக்கும்படி"

"ஓகோ! என்னிடம் நம்பிக்கை இல்லையா? இளவரசர் ஆதித்தர் அப்படி உன்னிடம் சொல்லி அனுப்பினாரோ?" என்ற போது, தஞ்சைக் கோட்டைத் தளபதியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.


"இளவரசர் அவ்வாறு சொல்லவில்லை; தங்கள் தமையனார் தான் அவ்விதம் கட்டளையிட்டார்!"
"என்ன? என்ன? பெரியவரை நீ எங்கே பார்த்தாய்?"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## திறமையான குள்ளன்



(நேற்றைய தொடர்ச்சி)

கொதிக்கும் குழம்பில் என் குழந்தைகளையா போட்டேன்? அவர்களையா சாப்பிட்டேன்? என்ன கொடுமை இது? இனி நான் என்ன செய்வேன்?" என்று சுவரில் மோதிக் கொண்டு அழுதான் அவன். இருவரும் நீண்ட நேரம் அழுதார்கள்.

ஒருவாறு மனம் தேறிய அரக்கன், "என் குழந்தைகளைக் கொன்றவர்கள் அந்தச் சிறுவர்கள் தான். என்னிடம் இருந்து அவர்கள் தப்ப முடியாது. எங்கு இருந்தாலும் அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பேன். கொன்று தின்று பழி தீர்ப்பேன்" என்று கோபத்தில் பற்களை நறநற வென்று கடித்தான்.

"என் மந்திரச் செருப்பைக் கொண்டு வா" என்று கத்தினான் அவன்.

கிழவியும் செருப்பைக் கொண்டு வந்தாள். அதைப் போட்டுக் கொண்டு புறப்பட்டான் அவன்.

"அரக்கன் தேடி வருவான். நம்மைப் பிடித்தால் கொன்று விடுவான். வேகமாக ஓடுவோம்" என்றான் குள்ளன். எல்லோரும் நீண்ட தூரம் வந்தனர்.

"என்னால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை" என்றான் மூத்தவன்.

"அரக்கன் இனி நம்மைத் துரத்த முடியாது. எதற்கும் பாதுகாப்பாக இங்கிருக்கும் குகைக்குள் பதுங்கிக் கொள்வோம். யாராலும் கண்டு பிடிக்க முடியாது" என்றான் குள்ளன்.

எல்லோரும் பதுங்கிக் கொண்டனர். அரக்கனின் காலடி ஓசை அவர்களுக்கு கேட்டது. எல்லோரும் நடுங்கினார்கள். அங்கு வந்த அரக்கன் எல்லாத் திசைகளிலும் பார்த்தான். அவர்கள் பதுங்கி இருப்பது அவன் கண்களுக்குத் தெரியவில்லை.

"ஏ! மந்திரச் செருப்பே! இங்குதான் அவர்கள் இருப்பார்கள் என்று என்னை அழைத்து வந்தாயே! இங்கு அவர்களைக் காணோமே? நீயும் என்னை ஏமாற்றுகிறாயா?" என்று சொல்லிவிட்டு அங்கேயே படுத்தான். களைப்படைந்த அவன் குறட்டை விட்டுத் தூங்கத் தொடங்கினான்.

இதைப் பார்த்த குள்ளன், "அரக்கன் தூங்குகிறான். அவ்வளவு சீக்கிரம் எழுந்திருக்க மாட்டான். நீங்கள் சத்தம் போடாமல் இங்கேயே இருங்கள். மந்திரச் செருப்பை அணிந்து நான் அரக்கன் வீட்டிற்குச் செல்கிறேன். அங்கிருந்து ஏராளமான பொருட்களை கொண்டு வருகிறேன். பிறகு நாம் அனைவரும் நம் வீட்டிற்குச் செல்வோம்" என்றான்.

எல்லோரும், "எங்களைக் காப்பாற்ற வேண்டியது உன் பொறுப்பு நீ என்ன நினைக்கிறாயோ அப்படியே செய்" என்றார்கள்.

வெளியே வந்தான் குள்ளன். அரக்கனின் காலில் இருந்த செருப்பைக் கழற்றினான். அவற்றைத் தன் காலில் அணிந்து கொண்டான்.

"ஏ! மந்திரச் செருப்பே! நான் அரக்கனின் வீட்டை அடைய வேண்டும்" என்று சொல்லி விட்டு நடந்தான்.

மந்திரச் செருப்பு அவனை அரக்கனின் வீட்டின் முன் நிறுத்தியது. "பாட்டி! கதவைத் திற. உன் மகனுக்கு ஆபத்து" என்று கத்தினான் அவன்.

கதவைத் திறந்த கிழவி, "என் மகனுக்கு என்ன?" என்று கேட்டாள்.

"உன் மகன் கொடிய திருடர்களிடம் சிக்கிக் கொண்டான். அவர்கள் அவனைக் கட்டி வைத்துத் துன்புறுத்துகிறார்கள் நிறைய பொருள் கொடுத்தால் உன் மகன் உயிர் பிழைப்பான். இல்லையேல் அவர்கள் அவனைக் கொன்று விடுவார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல சேவை செய்வதற்கு உரிய ஆற்றலைக் கெட்ட மனிதனிடம் ஒருநாளும் காண முடியாது.
~ பார்க்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# இலங்காபுரியில் மீண்டும் மக்கள் புரட்சி வெடிக்கும்

அரசாங்கத்துக்கு எதிராக மீண்டும் மக்கள் எழுச்சி கருக்கட்டத் தொடங்கியுள்ளது.

அதன் அறிகுறிகள் தென்பகுதியில் தென்படத் தொடங்கியுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகவும் மகிந்த ராஜபக்ஷ பிரதமராகவும் இருந்த போது அவர்களுக்கு எதிராகத் தென்பகுதியில், வரலாற்றில் முன்னொரு போதும் இவ்வாறு நடந்ததில்லை என்று கூறுமளவுக்கு சுனாமிப் பேரலை போல மக்கள் பேரெழுச்சி கொண்டு ஆட்சியாளர்களை ஓட ஓடத் துரத்தினர்.

இந்த நாட்டில் மக்கள் எழுச்சி கொண்ட போது, அதியுயர் ஆட்சிப்பீடங்களை விட்டு விட்டு ஆட்சியாளர்கள் தப்பி ஓடினர்.

எனினும் இன்றுவரை மக்களின் பேரெழுச்சிக்குப் பின்னால் இருந்த சக்தி பற்றி எவரும் வாய்திறக்கவில்லை.

மாறாக, எல்லாம் கடவுளின் திருவிளையாடல் என்று ஒரு தரப்புக் கூறியது.

இன்னொரு தரப்போ அவர்கள் செய்த அநியாயத்துக்கு மக்கள் தண்டனை வழங்கினர் எனக் கருத்துரைத்தது.

இதுபோல, தமிழ் மக்கள் விட்ட கண்ணீர் நாட்டின் செல்வத்தைத் தேய்க்கும் படையாக மாறி சம்பந்தப்பட்டவர்களை விரட்டியடித்த தென்பர்.

இங்கு யார் எதைக் கூறினாலும் அவை அனைத்தும் சரியான கருத்து என்பதுதான் உண்மை.

இவ்வாறு மக்கள் எழுச்சி ஏற்பட்டதன் காரணமாக ஆட்சி மாற்றம் நடக்க, ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

பரவாயில்லை. பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்து கிடக்கும் நாட்டை ஜனாதிபதி ரணில் தூக்கி நிமிர்த்துவாராயின், அதனை வரவேற்போம் என்பது போல மக்கள் அவருக்குச் சந்தர்ப்பம் கொடுத்தனர்.

ஆனால் மக்கள் வழங்கிய சந்தர்ப்பத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தக்கவாறு பயன்படுத்தத் தவறிவிட்டார்.

அதேநேரம் தனது பதவிக் காலத்தில் அப்படியொரு ஆர்ப்பாட்டம் இடம்பெறலாகாதென்பதற்காக, மக்கள் எழுச்சியில் ஈடுபட்டவர்களை – அதன் ஏற்பாட்டாளர்கள் எனக் கருதப்பட்டவர்களைத் தேடிக் தேடிக் கைது செய்து அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்கின்ற நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஒட்டுமொத்த மக்களும் திரண்டெழுந்து ஆட்சியாளர்களை விரட்டிய பின்னர், அந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் எனச் சிலரைக் கைது செய்வதென்பது அபத்தமானது.

இருந்தும் அந்த முறையற்ற வேலையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்தார். இருந்தும் மக்கள் அமைதி காத்தனர்.

அந்த அமைதியின் பொருளை உணர்ந்து கொள்ளாத ஜனாதிபதி ரணில் கண்டபாட்டில் வரிச்சுமைகளை மக்களின் தலைகளில் சுமத்திவிட, மீண்டும் மக்கள் போராட்டம் வெடிக்கத் தலைப்பட்டுள்ளது.

ஆம், தொழிற்சங்கப் போராட்டங்கள் தாழமுக்கம் போல் வலுவடைய, அது மக்கள் புரட்சியாக வெடிக்கும்.

அப்போது ஆட்சிப் பீடங்கள் மீண்டும் வெறிச்சோடும். அதன் பின்னர் ஒரு புதிய வியூகம் அமையும்.

# இலங்கையின் கடன் நெருக்கடிக்கு உடனடியாக தீர்வு காண்பதை முன்னிறுத்திச் செயற்படத் தயார்

## ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள், மத்திய வங்கி ஆளுநர்கள் மாநாட்டில் இணக்கம்

(டில்லி)

இலங்கையின் கடன் நெருக்கடி நிலைக்கு உடனடியாகத் தீர்வுகாண்பதை முன்னிறுத்தி செயற்படத் தயாராக இருப்பதாக ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் தெரிவித் துள்ளனர்.

இந்தியாவின் பெங்களூர் நகரில் கடந்த 24 - 25 ஆம் திகதிகளில் நடைபெற்ற ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் மாநாட்டில் கடன்நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுக்கு உதவுதல், அதனை முன்னிறுத்தி கடன்வழங்குநர்கள் ஒன்றிணைந்து செயலாற்றுதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இதன்போது ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் மாநாட்டின் பெறுபேறு குறித்த ஆவணம் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனால் வாசிக்கப்பட்டது. அதில் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் முகங்கொடுத்திருக்கும் கடன்நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"கடன்நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்குரிய தீர்வை அனைவரும் ஒருங்கிணைந்து பெற்றுக் கொடுப்பதற்கு உத்தியோகபூர்வ இருதரப்பு மற்றும் தனியார் கடன்வழங்குநர்கள் கூட்டாக இணைந்து பல்தரப்பு ஒருங்கிணைவை வலுப்படுத்துவது அவசியமாகும். இவ்வாறானதொரு பின்னணியில் "கடன் இரத்திற்கு அப்பால் கடன்நெருக்கடியைக் கையாள்வதற்கான பொதுச் செயற்றிட்டத்தை உருவாக்கல்" என்ற அடிப்படையின் கீழ் உருவாக்கப்பட்ட அனைத்துக் கடப்பாடுகளையும் நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அதேபோன்று அந்தப் பொதுச்செயற்றிட்டத்தை உரியவாறான காலப்பகுதியில், முன்னெதிர்வு கூறக்கூடிய அடிப்படையில், ஒருங்கிணைந்த முறையில் அமுல்படுத்த வேண்டும்" என்று அந்த ஆவணத்தில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சபை அமர்வு தொடர்பில் வகுப்பெடுக்க வேண்டாம்

## கடும் தொனியில் மணிவண்ணன்

(யாழ்ப்பாணம்)

சபை அமர்வில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என எனக்கு யாரும் வகுப்பெடுக்க வேண்டாம் என யாழ் மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் சபையில் கடும் தொனியில் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டு பாதீடு நேற்று இரண்டாவது தடவையாக சபையில் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்ட நிலையில் முன்னாள் முதல்வரின் பெயர் வாசிக்கப்பட்ட போது அவர் எழுந்து நீதிமன்ற வழக்கிற்கு தடை ஏற்படாதவாறு இந்த அமர்வில் கலந்துகொண்டுள்ளேன் எனத் தெரிவித்தார்.

அதன்போது இந் நாள் முதல்வர் ஆனல்ட், நீங்கள் பாதீட்டிற்கு ஆதரவளிக்கிறீர்களா இல்லையா என கூறுங்கள் அதைவிடுத்து வேறு ஒன்றும் இங்கே பேச வேண்டாம் என கூறினார்.

இதன்போது கொதித்தெழுந்த முன்னாள் முதல்வர் சபை அமர்வில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என எனக்கு யாரும் வகுப்பெடுக்கத் தேவையில்லை என கோபத்துடன் பதிலளித்துதான் இந்த வரவு செலவு திட்டத்தை எதிர்ப்பதாகவும் கூறி அமர்ந்தார். (ம-7,104)

# இந்திய இழுவைப் படகுகளால் சுழிபுரம் மீனவர்களின் பெறுமதியான வலைகள் நாசம்

தொழிலுக்கு சென்ற சுழிபுரம் - காட்டுப்புலம் மீனவர்களின் ஏழரை இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இந்திய இழுவைப் படகுகளால் நாசம் செய்யப்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சதாசிவம் சிறிகாந்தன் என்பவருடைய வலையே இவ்வாறு நாசம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து பாதிக்கப்பட்ட மீனவர் கருத்து தெரிவிக்கையில்,

நாங்கள் நேற்றிரவு (நேற்று முன்தினம் இரவு) கடலுக்கு சென்றோம். வலையை கடலில் விட்டு விட்டு இருந்தவேளை சுமார் 300 இந்தியன் இழுவைப் படகுகள் எங்களது கடல் எல்லைக்குள் வெளிச்சம் பாய்ச்சாது உள்நுழைந்தது.

இதன்போது எனது ஏழரை இலட்சம் ரூபா பெறுமதியான வலைகளை இந்தியன் இழுவைப் படகு வெட்டி நாசம் செய்துவிட்டு சென்றுள்ளது.

தற்போது மீன்பிடி பருவகாலம். வெட்டிய வலைகளை கடன் பெற்றே வாங்கினேன். அந்த வலைகளைக் கொண்டு இரண்டு தடவைகள் மீன் பிடித்த நிலையில் மூன்றாவது தடவை மீன் பிடிப்பதற்காக சென்றபோதே இவ்வாறு நேர்ந்துள்ளது.

ஆகையால் வாங்கிய கடனை எவ்வாறு மீள செலுத்துவது என தெரியாத நிலையில் உள்ளேன். இந்திய இழுவைப் படகுகளால் மீனவர்களாகிய நாங்கள் உயிரை விட வேண்டிய சூழ்நிலைக்குள் செல்ல வேண்டி உள்ளது.

அரசாங்கமும் கடற்றொழில் அமைச்சரும் எங்களது நிலையை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை விரைவில் எடுப்பதோடு எமக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றார். (ம-7,104)

# அமைச்சர் அலிசப்ரி இந்தியா செல்கிறார்

வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி நாளை 2 ஆம் திகதி இந்தியா செல்லவுள்ளார்.

பூகோள காலநிலை, பொருளாதாரம் தொடர்பில் இந்தியாவின் புதுடெல்லியில் நடைபெறும் (Raisina Dialogue) மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அவர் அங்கு செல்லவுள்ளார்.

இந்த மாநாட்டை தவிர, மார்ச் 03 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டுள்ள விசேட கலந்துரையாடல் ஒன்றிலும் அமைச்சர் கலந்துகொள்ளவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 04 ஆம் திகதி வரை வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி இந்தியாவில் தங்கவுள்ளார். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** செம்பியன் பற்று, குடாரப்பு, குடாரப்பு முருகன் கோவில், மாமுனை சந்தி, மாமுனை வடக்கு, நாகர் கோவில், நாகர் கோவில் வடக்கு, நெல்லியன் இராணுவம் முகாம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** பாலாவி, பொன்னாவெளி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# இலங்கையின் அபிவிருத்திக்கு உலக வங்கியின் ஆதரவு

இலங்கையின் அபிவிருத்தி மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கு உலக வங்கி தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என உலக வங்கியின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அபிவிருத்திக்கொள்கை நடவடிக்கைகளுக்கான சட்டங்களை உருவாக்குவதில் உலக வங்கி தொழில்நுட்ப ஆதரவை வழங்கும் என்றும், சர்வதேச ஊடகப் பயன்பாடு மற்றும் நலன்புரி நலன்கள் தொடர்பில் மேலும் வழிகாட்டுதல் மற்றும் தேவையான ஆதரவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்திற்குப் பொறுப்பான உப தலைவர் மார்ட்டின் ரேசர் (Martin Raiser) உள்ளிட்ட குழுவினர் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த போதே இதனைக் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய புலமைப் பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

## மார்ச் 8 வரை இலங்கை மாணவர்கள் பதிவு செய்யலாம்

### இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவிப்பு

(கொழும்பு)

இந்திய அரசினால் வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2023 - 2024 கல்வி ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி வரை இலங்கை மாண வர்கள் இதற்காகப் பதிவு செய்ய முடியும் என இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய அரசின் சார்பில் கலாசார உறவுகளுக்கான இந்திய பேர வையினால் வழங்கப்படும் இந்தத் திட்டத்தில் நேரு நினைவு புலமைப்பரிசில், மௌலானா அசாத் புல மைப்பரிசில், ராஜீவ் காந்தி புலமைப்பரிசில் திட்டம் உள்ளிட்ட 03 திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

பொறியியல், விஞ்ஞானம், வணிகம், பொருளாதாரம், மனித வளம் உள்ளிட்ட துறைகள் நேரு நினைவு புலமைப்பரிசில் திட்டத்தில் அடங்குகின்றன.

மௌலானா அசாத் புலமைப்பிரிசில் திட்டத்தின் கீழ் குறித்த பாடங்கள் தொடர்பான முதுகலை பட்டப் படிப்பிற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் பொறியியல், தொழில் நுட்பம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் பட்டப்படிப்பை தொடர முடியும் என கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம், பொறியியல், விஞ்ஞானம், வணிகம், பொருளா தாரம், வர்த்தகம், மனித வள /சமூக விஞ்ஞானம் மற்றும் கலை உள்ளிட்ட துறைகளில் கலாநிதி பட்டங்களுக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பும் இலங்கை மாணவர்களுக்கு கிட்டியுள்ளது. (நி)

### இலங்கையில் ஆர்ப்பாட்டங்களுக்கு தடை பொலிஸ் தலைமையகம் அதிரடி

(கொழும்பு)

ஆர்ப்பாட்டம் நடத்துவது தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், ஆர்ப்பாட்டம் நடத்தப்படுமாயின், சம்பந்தப்பட்ட பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு 6 மணித்தியாலங்களுக்கு முன்னதாக அறிவிக்கப்பட வேண்டுமென பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மக்கள் அமைதியான முறையில் ஒன்று கூடி கருத்துக்களை வெளியிடும் திறன் உள்ளதாகவும் ஆனால் ஆர்ப்பாட்டம் நடத்தினால் வீதியில் போக்குவரத்துக்கு பாரிய இடையூறு ஏற்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத்தினூடாக உள்ளூராட்சி மன்றத்திற்கு அலுவலகம் ஒதுக்கி அமைதியான முறையில் கூடி கருத்துகளை தெரிவிக்கவும் அமைதியாக கலைந்து செல்லவும் அரசியலமைப்புச் சட்டத்திலிருந்தே மக்களுக்கு உரிமை கிடைத்துள்ளது.

பாரிய கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் அமைதியைக் குலைக்கும் என்றும் 6 மணி நேரத்திற்கு முன்னதாக அறிவிப்பு வழங்கப்பட்டால், சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்கள் வீதிகள் தடைப்படாமல் இருப்பதை உறுதிசெய்யும் என்றும் நிஹால் தல்துவா குறிப்பிட்டார். (நி)

### சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 280 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 120 | 160 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 300 | 400 |
| தக்காளி | 120 | 100 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| கோவா | 100 | 70 | 80 | 100 |
| கரட் | 120 | 200 | 140-200 | 250 |
| பூசணி | 80 | 80 | 60 | 80 |
| புடோல் | 200 | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 160 | 160 | 140 | 200 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 130 | 140 |
| பாகற்காய் | 550 | 450 | 500 | 500 |
| வெண்டக்காய் | 350 | 300 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 350 | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 260 | 240 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 200 | 300 |
| கறிமிளகாய் | 550 | 450 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1500 | 2000 |
| போஞ்சி | 200 | 250 | 240 | 400 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 300 | 350 |
| கீரை - 1 பிடி | 100 | 110 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 150 | 160 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 80 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 250 | 280 | 300 |
| வெங்காயப்பூ | 160 | 120 | 160 | 250 |
| முள்ளங்கி | 60 | 80 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 120 | 150 | 100 |

## "இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணிக் கற்கைநெறி"

நீங்கள் க.பொ.த.(உ/த) இல் கணித,விஞ்ஞான பிரிவில் கற்றவர்களா? அப்படியாயின் மரபுவழி பல்கலைக்கழகமொன்றில் அனுமதி கிடைக்கவில்லையா? கவலையடைய வேண்டாம். உங்களுக்கு இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றைப் பெறுவதற்கான வாய்ப்பை இலங்கை திறந்த பல்கலைக்கழகம் வழங்கத் தயாராக இருக்கின்றது.

பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் கீழ் நிர்வகிக்கப்படும் இப் பல்கலைக்கழகமானது இலங்கையில் உள்ள ஏனைய பல்கலைக் கழகங்கள் போலவே உயர் தரச்சான்றிதழ்கள், டிப்ளோமாச் சான்றிதழ்கள், இளமாணிப் பட்டங்கள் மற்றும் பட்டமேற் பட்டங்களை வழங்குகின்ற ஓர் தேசியப் பல்கலைக்கழகமாக இருப்பதுடன் இலங்கையிலுள்ள ஏனைய தேசிய மரபுசார் பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் பட்டச் சான்றுதழ்களுக்கு சரிநிகரான தராதரத்தைக் கொண்டு இப்பட்டங்களை வழங்குகின்றமை இப் பல்கலைக் கழகத்தின் சிறப்பம்சமாகும்.

இவ்வகையில் இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது விஞ்ஞானமாணிப் பட்டத்தினை இயற்கை விஞ்ஞான பீடத்தின் மூலம் வழங்கி வருகின்றமை சிறப்பான அம்சமாகும். இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது ஆசியாவிலுள்ள திறந்த பல்கலைக் கழகங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் சிறப்பான அம்சத்தைக் கொண்டுள்ளது. அது என்னவெனில் திறந்த தொலைக் கல்வி (Open Distance Learning) முறை மூலமான ஆய்வுகூடப்பயிற்சி நெறியுடன் கூடிய விஞ்ஞானமாணி மற்றும் எந்திரவியல் விஞ்ஞான மாணிப் பட்டங்களை வழங்குவதாகும்.

இதனால் மரபுவழிப் பல்கலைக்கழக வாய்ப்பினைப் பெறத் தவறிய அல்லது உயர் தல்வி வாய்ப்பின் மூலம் விஞ்ஞானமாணிப் பட்டமொன்றினைப் பெறவிரும்புகின்ற ஒருவருக்கு மூன்று வருடங்களைக் கொண்ட பொது விஞ்ஞான மாணி பட்டத்தினையும் நான்கு வருடங்களைக் கொண்ட சிறப்பு விஞ்ஞான மாணி பட்டத்தினையும் வழங்கி வருவதுடன் பௌதீக விஞ்ஞானம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் என இரண்டு துறைகளில் தாவரவியல், விலங்கியல், கணிதவியல், கணனி விஞ்ஞானம், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய துறைகளில் விஞ்ஞான மாணிப் பட்டத்தினை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

திறந்த பல்கலைக்கழகமானது திறந்த என்ற சொல்லின் பொருளுக்கேற்ப 18 வயதைப் பூர்த்தி செய்த ஒருவருக்கு அவருடைய கல்வித் தகைமைக்கேற்ப மூன்று வகையான தகுதிப்பாட்டின் மூலம் இத்தகைய வாய்ப்பினை வழங்குகின்றது.

முதலாவது வகைப்பாட்டில் க.பொ.த.(உ/த) ல் கணித அல்லது உயிரியல் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்களும் இரண்டாவதாக க.பொ.த.(உ/த)ல் மூன்று தடவைகளில் மூன்று பாடங்களில் கணிதம் மற்றும் உயிரியல் பிரிவில் சித்தியடைந்திருத்தலாகும்.

உதாரணமாக க.பொ.த. (உ/த)இல் முதலாவது தடவையில் இரசாயனவியலையும் இரண்டாவது தடவையில் பௌதீகவியலையும் மூன்றாவது தடவையில் உயிரியல் அல்லது இணைந்த கணிதத்தில் சித்தியடைந்திருத்தலாகும்.

அவ்வாறு மூன்று தடவைகளில் மூன்று பாடங்களிலும் சித்தியடைதல் போதுமானது. மூன்றாவது வகைப் பாடாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் கணித மற்றும் விஞ்ஞான அடிப்படைச் சான்றுதழ் கற்கை நெறியினை பூர்த்தி செய்திருப்பவர்களும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். இவ்வடிப்படைச் சான்றிதழ் கற்கை நெறியானது இரண்டு ஆண்டுகளைக் கொண்டது. எனினும் திறந்த பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் விலக்களிப்புப் பரீட்சையில் சித்தியடைபவர்கள் ஒரு வருடத்தினைக் கொண்ட இவ் அடிப்படைக் கற்கை நெறியை பூர்த்தி செய்தல் போதுமானதாகும். இது மட்டுமன்றி முதலிரண்டு வருடங்களை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் இயற்கை விஞ்ஞான பீடத்தில் நிறைவு செய்து மிகுதி இரண்டு வருடங்களையும் லண்டனிலுள்ள ESSEX பல்கலைக் கழகத்தில் தொடரக்கூடிய வாய்ப்பினை இக்கற்கைநெறி கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள இத்தகைய வாய்ப்பானது க.பொ.த. (உ/த) இல் கணித மற்றும் உயிரியல் பிரிவில் பயின்று உயர்கல்வி வாய்ப்பானது மறுக்கப்பட்ட அல்லது வாய்ப்பினைத் தவறவிட்ட மாணவர்களுக்கு இலங்கையிலுள்ள தேசிய பல்கலைக் கழகம் மூலம் விஞ்ஞான மாணிப் பட்டத்தினைப் பெறுவதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்குகின்றது எனலாம்.

கி.கந்தவேள்
இலங்கைத்திறந்த பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 நாட்களே...

எனும் குழந்தையே உயிரிழந்துள்ளது.

பால் குடித்து சிறிது நேரத்தில் குழந்தை மயக்கமுற்றுள்ளது. அதனையடுத்து பெற்றோர் குழந்தையை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

வைத்தியசாலையில் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது. குழந்தையின் உயிரிழப்புக்கு காரணம் கண்டறியப்படாத நிலையில், உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைகளுக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.(ம-7,33)

## வரவு - செலவுத்...

சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட்டால் இரண்டாவது தடவையாக சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

வரவு-செலவுதிட்டத்திற்கு ஆதரவாக 16 வாக்குகளும் எதிராக 22 வாக்குகளும் பதிவாகின. 45 உறுப் பினர்கள் அங்கம் வகிக்கும் யாழ்.மாநகர சபையில் ஒருவர் உயிரிழந்த நிலையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் 16 உறுப்பினர்களும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் 13 உறுப்பினர்களும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் சார்பில் 9 உறுப் பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 3 உறுப்பினர்களும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் 2 உறுப்பினர்களும் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ஒரு உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## ஜனநாயகத்...

தக்கோரி மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தின் மீதான அரச பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்த நிவிதிகல நிமல் அமரசிறிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இரங்கல் தெரிவித்தார்.

தனது அரசியல் சித்தாந்தம் மற்றும் கொள்கைகள் தொடர்பில் பல்வேறு மாற்று அபிப்பிராயங்கள் காணப்படுகின்ற போதிலும், ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து எதிர்க்கட்சியில் செயற்படும் சகோதர அரசியல் கட்சியான மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தின் மீதான தாக்குதலை கண்டிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மக்களின் அடிப்படை உரிமையான வாக்களிக்கும் உரிமையை தற்போதைய அரசாங்கம் பறித்துள்ளமைக்கு எதிராக தாம் வீதியில் இறங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மிருகத்தனமான, சர்வாதிகார, எதேச்சதிகார அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கொலைக்கு ஜனாதிபதியும் அமைச்சரவையும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும், ஜனநாயகத்தைக் கோரி வீதியில் இறங்கிய நிமல் அமரசிறி மீதான கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலை ஒரு கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி கண்டிப்பதாகவும் இனம், மதம், சாதி, வர்க்கம்,கட்சி வேறுபாடின்றி தேர்தலைக் கோரி மக்கள் நடத்தும் இந்தப் போராட்டத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒரு கட்சியாக ஏகமானதாக ஒன்றுபடுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதியால் தேர்தலுக்கு பணம் இல்லை எனவும், பணம் வழங்க முடியாது எனவும், பணம் இருந்தாலும் தேர்தலை நடத்த முடியாது என்று கூறினாலும், அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளதாகவும், தற்போதைய ஜனாதிபதி, ராஜபக்ஷவை பாதுகாக்கும் நோக்கில் பல்வேறு நிறுவனங்களின் அதிகாரத்தை தம்மிடம் வைத்திருந்து நாட்டு மக்களை ஏமாற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.(ம-7)

## புலிகளின்...

பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தொண்டு நிறுவனங்களைப் பயன்படுத்தி நிதி திரட்டி தமது செயற்பாடுகளிற்கு பயன் படுத்துகின்றனர் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

2009இல் இலங்கை அரசாங்கத்தினால் இராணுவ ரீதியில் தோல்வியடைந்தபோதிலும் விடுதலைப் புலிகளின் சர்வதேச ஆதரவாளர்கள் வலையமைப்பும் நிதி ஆதரவும் தொடர்கின்றது எனவும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

2009 முதல் விடுதலைப் புலிகள் அமைப்பு [illegible] 2009ஆம் ஆண்டின் பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படும் எந்தத் தாக்குதல்களும் பதிவாகவில்லை எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. (ம-7)

## தமிழ் அரசியல்...

டுள்ளார்.

ஊடகம் ஒன்றினால் வடக்கின் அரசியல் நிலைவரம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ம-7)

## அரசுக்கு எதிராக...

தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணத்தை குறைக்குமாறு கோரிக்கை முன்வைத்தே மக்கள் இவ்வாறு வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ம-7)

## இந்திய - பசுபிக்...

அமெரிக்கா அறிவுரை வழங்கியுள்ளது.

இலங்கை இன்று எதிர்நோக்கும் பொருளாதார சவால்களை வெற்றி கொள்வதற்கு, வளமான இந்திய - பசுபிக் பிராந்தியத்தை கட்டியெழுப்புவது முன்னெப்போதையும் விட மிகவும் முக்கியமானது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ஐ.எம்...

கலந்துரையாடி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அனைத்து ஆவணங்களும் தயார் நிலையிலுள்ளதாகவும் சீனாவிடம் இருந்து கிடைக்க வேண்டிய கடன் சான்றிதழ் கிடைத்தவுடன், சர்வதேச நாணய நிதியத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த மாத இறுதிக்குள், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் வசதிக்கான ஒப்புதல் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் மேலும் கூறினார். (ம-7)

### முழு ஆசியாவுக்கும்

# நெல் பயிரிட்டு உணவளித்தோம்

### சந்திரிகா பண்டாரநாயக்க

இலங்கையில் நெல் பயிரிடப்பட்டு முழு ஆசியாவுக்கும் உணவளிக்கப்பட்டது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறிப்பிட்டார்.

ஆனால் இன்றைய நிலைவரப்படி உண்பதற்குக் கொஞ்சம் கூட சோறு இல்லாமல் மக்கள் மண்டியிடுகிறார்கள்.

களனியில் நடைபெற்ற புதிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-7)

## நாடளாவிய...

ஆதரவு வழங்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறினார்.

எனினும், பாடசாலை கல்வி நடவடிக்கைகள் வழமைபோன்று இடம்பெறும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாடு முழுவதும் உள்ள வங்கிச் சேவைகள் இன்றைய தினம் ஸ்தம்பிதமடையும் சாத்தியம் உள்ளதாகவும் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவர் ஷன்ன திஸாநாயக்க கூறினார். (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 28/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1500
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 7 9 0 8 1 8
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.02.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1075
L 10 26 61 72
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.02.28
சீட்டிழுப்பு இலக்கம் 3287
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
S 15 21 54 55
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 28/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1393
N 11 02 31 53 79

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.02.28
சீட்டிழுப்பு இலக்கம் 354
மேஷம் 13 31 52 53 மேஷம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/28
சீட்டிழுப்பு இலக்கம் 5045
B 9 4 5 8 5 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2020
சீட்டிழுப்பு திகதி 2023.02.28
நிறம் இள நீலம்
தினம் செவ்வாய்க்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 32,283,540/-
R 09 18 24 63
587695 13609
DLB www.dlb.lk

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.28
சீட்டிழுப்பு இல : 4181
வர்ணம் : பச்சை
ரூ. 4,430,280/-
வெற்றி இலக்கங்கள்
35 41 47 51 W
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 294
சீட்டிழுப்பு திகதி 2023.02.28
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 17 32 33
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,989,220/-
DLB www.dlb.lk

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 2,000,000/-
திகதி 2023-02-28
வெற்றி வாரம் 3732
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 11 18 27 44
3887 557
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,185,860/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 03 51 55 56 74
சீட்டிழுப்பு வாரம் 1196
2023.02.28 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 309,651,400.20
DLB தொலைபேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1846
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.02.28
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,861,060/-
வெற்றி இலக்கங்கள் 28 29 72 76 A
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு இலட்சம் சுற்றுலாப் பயணிகள் பெப்ரவரி மாதம் இலங்கை வருகை

(கொழும்பு)

2023 பெப்ரவரி மாதம் முதல் 26 நாட்களுக்குள் இலங்கைக்கு ஒரு இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களின்படி, இந்த ஆண்டு ஜனவரியில் மொத்தம் 102,545 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இது இலங்கையின் சுற்றுலாத் துறையின் இரண்டாவது மிகப்பெரிய சுற்றுலா வருகை மாதமாக அமைந்துள்ளது.

மேலும், எதிர்வரும் மாதங்களில் நாட்டில் சிறந்த பருவநிலை நிலவுமென்பதால், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடுமென நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் இந்த நாட்டிற்கு வந்த சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலானோர் ரஷ்ய பிரஜைகள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதுமட்டுமின்றி, இந்தியா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்ரேலியா, கனடா, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர். (ம-7)

# யாழில் புற்றுநோய் காரணமாக இளம் தாய் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பப் பெண் ஒருவர் புற்று நோய் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இதில் வடமராட்சி கிழக்கு தாளையடிப் பகுதியைச் சேர்ந்த 24 வயதான ஒரு பிள்ளையின் தாயாரே உயிரிழந்துள்ளார்.

புற்று நோய் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் குறித்த பெண் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்மை குறிப்பிடத்தக்கது. (ம-7)


**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**04.03.2023**

**வங்கியியல் கற்கைநெறிகள்**
**Banking Courses**
**IABF & DABF**
(Tamil & English Medium)
Qualification:- G.C.E O/L 6 Passes with 5 Credits including Maths.

**கணக்காளர் கற்கைநெறிகள்**
**Chartered Accounting Courses**
Business level - 1, II
(Tamil & English Medium)
Qualification:- G.C.E A/L 3 Passes.

**தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு**
**aat (Sri Lanka)**
**AA1, AA2, AA3)**
Qualification:- G.C.E O/L 6 Passes
Medium - Tamil & English

**G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்**

**Certificate Course in English**
21 Batches have successfully Completed the Course

Further Details: **Jaffna College Undergraduate Dept.**
464, Hospital Road, Jaffna.
021 222 3382, 021 222 9149
077 440 5917 (C-6078)


# வாடிக்கையாளர்களுக்கு இன்றும் சேவை வழங்கப்படும்

## மக்கள் வங்கி, இலங்கை வங்கித் தலைவர்கள்

(கொழும்பு)

வாடிக்கையாளர்களுக்கு இன்று சேவைகளை வழ்ங்கத் தயாராக இருப்பதாக மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கித் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்காக அனைத்து அரச ஊழியர்கள் மற்றும் வங்கி ஊழியர்களும் தங்கள் பொறுப்பை நிறைவேற்றுவார்கள் என்று அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

வங்கித் துறையில் உள்ள பிரச்சினைகள் குறித்து நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

அத்துடன், நாட்டில் நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் விரிவான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கும் இவ்வேளையில் வங்கிக் கட்டமைப்பு செயலிழந்தது என்ற செய்தி சர்வதேச சமூகத்திற்கு செல்வது நாட்டுக்கு நல்லதொரு நிலைமை அல்ல எனவும் சாகல ரத்நாயக்க சுட்டிக்காட்டினார். இதேவேளை பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு வங்கிக் கட்டமைப்பின் ஆதரவு மிகவும் அவசியமானது என இலங்கை வங்கியின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேரா குறிப்பிட்டிருந்தார். (ம-7)

# ஜனதிபதி ரணிலை கொல்ல சதித்திட்டம்

## விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீதான கொலை சதி முயற்சி தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசியல் கட்சியொன்றுடன் தொடர்புடைய குழுவொன்று, சில தினங்களுக்கு முன்னர் வெளிநாடொன்றில் இந்த கொலைச் சதித்திட்டம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு தகவல் கிடைத்துள்ளதாக கூறப்படுகின்றது.

இரண்டு வாரங்களுக்குள் ஜனாதிபதியை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு மேலதிக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய அரசியல் கட்சியின் செயற்பாட்டாளர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (ம-7)


**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் புத்தூரில் 71 பரப்பு காணி விற்பனைக்கு**
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 km
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 m தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய் மட்டும்
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14764)

**076 465 0171, 076 911 9371**

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் புத்தூரில் 41 பரப்பு காணி விற்பனைக்கு**
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரத்தில்
- புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 km தூரம்
- புத்தூர் சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி
- அரச தனியார் பேருந்துகள் செல்லும் வீதி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14764)

**076 435 0614, 077 638 5683**

**ஆரம்பக் கல்வி ஆசிரியை தேவை**

திருநெல்வேலியில் இயங்கும் சிறுவர் பூங்கா முன்பள்ளியின்
**சரஸ்வதி கல்வி நிலையத்திற்கு**
தரம் 1 இல் இருந்து மாணவர்களுக்கு கற்பிக்கக்கூடிய பாடசாலை ஆசிரியை தேவை. திருநெல்வேலி, நல்லூர், கொக்குவில் பிரதேசத்தில் இருப்பவர்களுக்குப் பொருத்தமாக இருக்கும்.
உடன் தொடர்பு கொள்ளவும்
**077 068 1958** (14757)

**வாகனம் குத்தகைக்கு தேவை**

**வான்கள், கார்கள் குத்தகைக்கு தேவை.**
தொடர்புகளுக்கு :
**077 489 1279** (14760)

**வேலை வாய்ப்பு**

Northern (Group of Company) க்கு
**விளம்பரப்படுத்தல் முகவர் தேவை**
(ஆண் / பெண் இருபாலாரும்)
(தகைமை - A/L, Degree)
**அலுவலக உதவியாளர் பெண் தேவை.** வயது 18-30 வரை
மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
No.340/7, K.K.S Road, Jaffna.
T.P : 077 922 7102 (C-6082)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14750)

**076 825 7716** (ஆகாஸ்)

**Pearl Island Inn**
**Hotel & Restaurant**

உயர்தரம் வாய்ந்த தங்ககங்கள் (Rooms) வசதிகளுடன் யாழ், இந்திய, சைனீஸ், மொங்கோலியன் பாரம்பரிய உணவுகள் மற்றும் குளிர்பானங்களை சுவைத்திட எம்மோடு இணைந்திடுவீர்.

தொடர்புகளுக்கு :
077 002 2088
021 222 2678
www.pearlislandinn.com
No.603, Hospital Road, Jaffna.

உங்கள்
S.Ubesegaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn குழுமம்






(C-6079)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.